GOKULAM
நவம்பர் 2010 ❖ விலை ரூ.8/- ❖ 80 பக்கங்கள்

கோகுலம்

குழந்தைகளின் குதூகலம்!

குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா நினைவுச் சிறுகதைப் போட்டி முடிவு



- வெள்ளை நாரை!
- டிசலுக்கு மாற்று!

மனசெல்லாம் மத்தாப்பூ!

EACH POWER CAN BE UNLOCKED BY EATING THEIR FAVOURITE POPPINS. 10 POWERS: SHAPE SHIFTER- GREEN APPLE, SPEED-MANGO,




FLIGHT-ORANGE, GIANT-WATERMELON, STRENGTH-BLUEBERRY, SHRINK-LYCHEE, INVISIBLE-PINEAPPLE, SPIDEY CAN-MUSK MELON, FIREMAN-BLACK CURRANT, FORCE FIELD-GRAPE.

RECAP: RAM AND SHYAM RESCUE AN ALIEN - ZAPTOMAAN, WHEN HIS SPACESHIP CRASHES TO EARTH. IN RETURN HE GIFTS THEM THE CREATOR, A POWERFUL GADGET WITH 10 POWERS.

கோகுலம்

நவம்பர் 2010 மலர் : 28 இதழ் : 10

உயிர்களிடத்தில் அன்பு வேணும் – தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும் – பாரதியார்



அருமைக் குழந்தைகளே,

குழந்தைகளைக் கொண்டாடிய ஜவாஹர்லால் நேருவின் பிறந்த நாள் (நவம்பர் 14) இந்த மாதம்தான்! ரோஜாவின் ராஜாவான அவர் பிறந்த நாளில் நாம் புரிந்து கொள்ள வேண்டிய முக்கிய விஷயம் ஒன்று உண்டு.

நம்மை வளர்ப்பவர்கள்!

நம்முடைய தவறுகளை எவராவது சுட்டிக் காட்டினால், அதற்காக அவரிடம் நாம் கோபிக்கக் கூடாது. தவறை திருத்திக் கொள்ள வேண்டும். அப்படித்தான் நடந்து கொண்டார் நேருஜி.

அவரைப் பற்றி ஒரு பத்திரிகை, 'நேருவின் போக்கு சர்வாதிகாரத் தன்மாய் போய்க் கொண்டிருக்கிறது. நாளை அவர் சர்வாதிகாரியாய் மாறினால், அவரைத் தட்டிக்கேட்க யாருமில்லை' என்று எழுதியது. அதைப் படித்த அனைவரும், அந்தப் பத்திரிகை மீது கோபம் கொண்டனர். 'இதை சும்மா விடக்கூடாது' என்று ஆவேசப்பட்டனர். ஆனால், நேரு அமைதியாகச் சொன்னார்:

''என்னைப் பற்றி இந்த எதிர்ப்புக் கருத்தாவது வந்ததே. நீங்கள் போங்கள். நான் பார்த்துக் கொள்கிறேன்.''

இதிலென்ன ஆச்சரியம் என்றால், அதை எழுதியவரே அவர்தான். புனை பெயரில் எழுதியிருந்தார்.

விமர்சனம் என்பதை, நம்மை மேம்படுத்தத்தான் சொல்கிறார்கள் என்று புரிந்து கொண்டால், நாமும் இப்படிச் சிறந்தவர்களாவோம். அதுதான், இந்த நாளில் நாம் உணர வேண்டிய முக்கியச் செய்தி!



அன்புடன்,
கோகு



''தீபாவளின்னாலே எனக்கும் எங்கப்பாவுக்கும் ஒரே பயம்தான்.''

''வெடி வெடிக்கவா?''

''இல்லை. எங்கம்மா செஞ்ச பலகாரங்களைச் சாப்பிடத்தான்.''



''இந்த வருஷம் தீபாவளிக்கு முதல்ல என்ன வாங்கப் போறீங்க?''

''வழக்கம் போல கடன்தான்.''



''இது அனுமான் வெடி!''

''அப்படியா? எப்படி வெடிக்கும்?''

''உங்க வீட்டுல நெருப்பு வைச்சா பக்கத்து வீட்டுல போய் வெடிக்கும்.''

பிரேக்



''ஏம்பா டிரைவர் பஸ் இப்படி மேலும் கீழுமா டான்ஸ் ஆடுது. ஏன்?''

''பிரேக் பிடிக்கலை சார். அதான் பிரேக் டான்ஸ் ஆடுது.''

பி. பரத்,
கோவிலாம்பூண்டி.

இரண்டாம் அட்டையில் இடம்பெற வேண்டிய உறுப்பினர் சங்கப் புகைப்படங்கள் ஆறாம் பக்கத்தில் இடம்பெற்றுள்ளன.

(ஆர்.)



"அந்த நாய் என்ன வகை? என்ன விலையாம்?"

"ஆயிரம் ரூபாயாம்."

"குறைச்சுக் கேட்டுப் பார்த்தீங்களா?"

"ம், கேட்டேன். அதெல்லாம் சூப்பரா குரைக்குது."

டான்ஸ்!

"தம்பி ஜோசியர் வீட்டுக்கு எப்படிப் போகணும்?"

"ஜாதகத்தோட போகணும் சார்."



கல்கி

கோகுலம்

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர்: லக்ஷ்மி நடராஜன்

ஆசிரியர் : சீதா ரவி

வடிவமைப்பு : எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன், பா.கோபால்

தொலைபேசி : 044 - 4343 8888

தொலைநகல் : 044 - 4343 8899

ஆசிரியர் குழு : 044 - 4343 8822

tamilgokulam@kalkiweekly.com

விளம்பரப் பிரிவு : 044 - 4343 8811

marketing@kalkiweekly.com

சந்தா பிரிவு : 044 - 4343 8833

subscription@kalkiweekly.com

விற்பனை பிரிவு : 044 - 4343 8844

sales@kalkiweekly.com

இன்டர்நெட் முகவரி : www.kalkionline.com

இணையதளத்தில்... வாங்கி, வாசித்து, மகிழ...
www.sangapalagai.com

சந்தா விவரம் (ஒரு வருடம்) :

உள்நாடு : ரூ.96/-

வெளிநாடு : ரூ.1000/-

கல்கி பில்டிங்க்ஸ்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காட்டுதாங்கல், சென்னை - 32

குழந்தைகளின் குதூகலம்!



மனசெல்லாம்

ராகுல்

மத்தாப்பு ஒளிர்கிறது! பட்டாசுகள் வெடிக்கின்றன. புத்தாடைகள் சரசரக்க, குழந்தைகளும் பெரியவர்களும் உற்சாக மாக கோயில்களுக்குச் செல்கின்றனர். அக்கம் பக்கத்தில் உள்ள வீடுகளுக்குச் சென்று இனிப்பு கொடுக்கின்றனர். வாழ்த்துச் சொல்கின்றனர்.

விழாக்களின் நோக்கமே இதுதான். 'அருகில் உள்ளவர்களுடன், இனிமை யைப் பகிர்வதுதான் வாழ்வில் முக்கியம்' என்பதைத்தான் விழாக்கள் உணர்த்து கின்றன. அதிலும், தீபாவளி நாடெங்கும் கொண்டாடப்படும் மிகப்பெரிய பண் டிகை. இந்துக்கள் மட்டுமல்ல; சமணர் களும் சீக்கியர்களும்கூட இந்த விழா வைக் கொண்டாடுகிறார்கள்.

அமிர்தசரஸில் உள்ள பொற்கோயி லின் கட்டுமானப் பணிகள் துவங்கிய நாள் இதுதான். அதனால் சீக்கியர்களின் திருநாளாகத் திகழ்கிறது! வர்த்தமான மகாவீரர், தம் உடலைத் துறந்த (மகாநிர்வாணம் அடைந்த) நாளும் இதுதான். அதனால், சமண சமயத்தைச் சேர்ந்தவர்களும் இந்த நாளைத் திரு நாளாகக் கொண்டாடுகிறார்கள்.

'ராமன், மீண்டும் அயோத்திக்குத் திரும்பிய நாள், என்பதாக உத்திரப் பிர தேச மக்கள் இந்த நாளைக் கொண் டாடுகிறார்கள். நரகாசுரனை கிருஷ்ணன் வதம் செய்த நாள்; அசுரன் கேட்ட வரத்தினால், அந்த நாளை விழாவாகக் கொண்டாடுவதாகச் சொல்வார்கள்.

காரணம் எதுவாக இருந்தாலும் தத்துவம் ஒன்றுதான். மொழிகள், மதம்

இனம் என்று வேறுபட்ட மக்கள் கூட்டம், விழா என்ற பெயரில் ஒருங்கிணையும் சிறப்புதான் நாம் உணர வேண்டிய அம்சம்! 'வேற்றுமைகளைப் பட்டியலிட்டால், பிரிவுகள் மட்டும்தான் நிகழும்; ஒற்றுமையைக் கவனித்தால், வலிமை அதிகரிக்கும்' என்று உணர்த்துகின்ற திருநாள் இந்த தீபாவளி!

அதுமட்டுமல்ல; 'எல்லோரும் சந்தோஷமாக இருக்க வேண்டும்' என்பதுதான், தத்துவம் அறிந்த பெரியோர்கள் சொல்லும் வார்த்தை, நடைமுறை வாழ்வில், அனைவரும் சந்தோஷப்பட வேண்டும்; அனைவரோடும் இணக்கமாகப் பழக வேண்டும்; அனைவரிடமும் அன்பு காட்ட வேண்டும் என்று உபதேசமாக மட்டும் சொல்லாமல், விழாக்களாக நடைமுறைப் படுத்தி இருக்கிறார்கள்.

பட்டாசு வெடிப்பதும், இனிப்பு உண்பதும் இந்தத் திருநாளில் எப்படிச் சிறப்போ, அதே அளவுக்கு இதன் பொருளை உணர்வதும் சிறப்பு! அந்த நினைவுடன், உங்கள் வீட்டின் அருகில் ஏதேனும்

மத்தாப்பூ!



ஆதரவற்றோர் இல்லம் இருக்குமானால், முதியோர் இல்லம் இருக்குமானால், நீங்கள் நேரில் சென்று இனிப்பு வழங்க முயலுங்கள். அவர்கள் முகத்திலும் ஆனந்தத்தைக் காணுங்கள். அப்போது உங்கள் மனசெல்லாம் மத்தாப்பூ ஒளிரும்!

அட்டையில் : ஸ்ம்ருதி

வண்ணப்படங்கள் : ஸ்ரீஹரி

கோகுலம் சிறுவர் சங்கம்

உறுப்பினர்கள்


1826


1827


1828


1829


1830


1831


1832


1833


1834


1835


1836


1837


1838


1839


1840


1841


1842


1843


1844


1845


1846


1847


1848



1849



1850

தொடர்ச்சி 3 ஆம் அட்டையில்...

பனைமரத்தில் பேய்!

கதை: எஸ்.தணிகைவேல்.காஞ்சிபுரம் படம்: பிள்ளை





களில் உள்ள 'ஹீமோ குளோபின்' என்னும் வண்ணப் பொருள். இது இரும்புச் சத்து நிறைந்த ஒரு வேதிப்பொருள். 'ஹீம்' எனும் இரும்புச்சத்துள்ள நிறமியும், 'குளோபின்' எனும் புரதப் பொருளும் இணைந்ததுதான் 'ஹீமோ குளோபின்'. இதுதான் இரத்த உற்பத்திக்கும் அதன் செயல்பாட்டுக்கும் அடிப்படை. நாம் சுவாசிக்கும் காற்றிலிருந்து பிராண வாயுவைப் பெற்று, உடல் முழுவதும் எடுத்துச் சென்று, திசுக்களுக்கும் உயிரணுக்களுக்கும் கொடுத்துவிட்டு, அங்குள்ள கரியமில வாயுவை நுரையீரலுக்குக் கொண்டு வந்து

இரத்தம் பெருக்கும்

நாம் உயிர்வாழ மிகவும் ஆதாரமாக இருப்பது, இரத்தம். இதில் சிவப்பணுக்கள், வெள்ளையணுக்கள், தட்டணுக்கள், பிளாஸ்மா என்று பல பொருள்கள் உள்ளன. இவற்றில் சிவப்பணுக்கள் முக்கியமானவை. ஒரு கன மில்லிமீட்டர் இரத்தத்தில் சுமார் 50 லட்சம் சிவப்பணுக்கள் இருக்கும். இந்த அளவு சரியாக இருந்தால்தான் இரத்தம் சரியான அளவில் செயல்படும்.

ஹீமோகுளோபின் தெரியுமா?

இரத்தத்தின் நிறம் சிவப்பு. இந்தச் சிவப்புக்குக் காரணம், சிவப்பு அணுக்

வெளிசுவாசம் மூலம் வெளியேற்றுகிறது. இதனால் இரத்தம் சுத்தமாகிறது. இரத்தம் செய்கின்ற முதன்மையான பணி இதுதான்

குழந்தைகளுக்கு இரத்தசோகை!

உடலில் இரத்தம் உற்பத்தியாக ஹீமோகுளோபின் தேவை. நாம் சாப்பிடும் உணவில் இரும்புச்சத்துக் குறையுமானால் ஹீமோகுளோபின் உற்பத்தி குறையும். அப்போது இரத்த அளவும் குறையும். பொதுவாக ஹீமோகுளோபின் அளவு 100 மி.லி. இரத்தத்தில் 13 முதல் 15 கிராம் வரை இருக்க வேண்டும். இந்த அளவு

பத்து கிராமுக்குக் கீழே இருந்தால் 'இரத்த சோகை' நோய் உள்ளது என்று பொருள்.

நினைவாற்றல் குறையும்!

இரத்தசோகை ஏற்படுமானால், முதலில் பசி குறையும். அடிக்கடி உடல் சோர்வு ஏற்படும். படிப்பில் கவனம் செலுத்துவது, பாடங்களைக் கற்பது, கற்றதை மனப்பாடம் செய்வது போன்ற திறன்கள் குறையும். இவற்றின் விளைவாக நினைவாற்றல் குறையும். அறிவுத்திறன் குறையும். நோய் எதிர்ப்பாற்றல் குறைந்து விடும். இதனால் வயிற்றுப்போக்கு, சீதபேதி போன்ற தொற்றுநோய்கள் அடிக்கடி தொல்லை தரும்.

தலைவலி தொந்தரவா?

தலைவலி, இரத்தசோகை நோய்க்கு முக்கிய அறிகுறி. ஆதலால், குழந்தைக்கு அடிக்கடி தலைவலி வருமானால் இரத்த சோகை உள்ளதா என்று பரிசோதித்துக் கொள்ள வேண்டும். இரத்தசோகை இருப்பவர்களுக்குக் கண், நாக்கு, நகங்கள்

உணவுகள்!

வெளிறி விடும். முகம் வீங்கும். நடந்தால் இளைப்பு ஏற்படும். அரிசி, விபூதி, சாக்பீஸ், . மண் போன்றவற்றைச் சாப்பிடத் தோன்றும். தலைமுடி உதிரும். அடிக் கடி வாய்ப்புண் வரும்.

குடல்புழு தொல்லை!


இந்தியாவில் குழந்தைகளுக்கு இரத்தசோகை ஏற்பட முக்கியக் காரணம் குடலில் புழுக்கள் வளர்வதுதான். குழந்தைகளுக்கு மண்ணில் விளையாடும் பழக்கம் உள்ளதால், கொக்கிப்புழு, உருண்டைப்புழு, நூல்புழு ஆகியவை குடலில் சேர்ந்து இரத்தசோகையை ஏற்படுத்துகின்றன.

எவ்வளவு இரும்பு தேவை?

12 வயதுக்குக்கீழ் உள்ள குழந்தைகளுக்கு நாளொன்றுக்கு 15 மி. கிராம் இரும்புச்சத்து தேவை. 12லிருந்து 16 வயதுக்குள் உள்ளவர்களுக்கு 25 மி.கிராம் இரும்புச்சத்து தேவைப்படுகிறது.

இரும்புச் சத்துள்ள உணவுகள்:

சைவ உணவுகளைவிட அசைவ உணவுகளில்தான் இரும்புச்சத்து அதிகம். ஆட்டிறைச்சி, கோழியிறைச்சி, ஈரல்,



டாக்டர் கு. கணேசன்

வஞ்சிரம் மீன், இறால் மீன், முட்டை ஆகியவற்றில் இரும்புச்சத்து அதிகம். சைவ உணவு வகையில் முருங்கைக்கீரை, பசலைக்கீரை, அரைக்கீரை போன்றவற்றில் இரும்புச்சத்து அதிகம். மேலும் சோயா, கோதுமை, சோளம், கேழ்வரகு, ஓட்ஸ், பச்சையிலைக் காய்கறிகள், காலிபிளவர், சுண்டைக்காய், பூசணிக்காய் போன்ற வற்றிலும் இரும்புச்சத்து நிறைந்துள்ளது. பேரீச்சை, உலர் திராட்சை, முந்திரி, பாதாம், பட்டாணி, உளுந்து போன்ற வற்றிலும் இரும்புச்சத்து அதிகம்.

வைட்டமின் பி12 தேவை!

இரத்த உற்பத்திக்கு இரும்புச்சத் துடன் வைட்டமின் பி12, வைட்டமின் சி, ஃபோலிக் அமிலம் போன்றவையும் தேவை! முட்டை, பால், பாலில் செய்யப் பட்ட பொருள்களில் வைட்டமின் பி12 தேவையான அளவுக்கு உள்ளது. ஆரஞ்சு, எலுமிச்சை, நெல்லி, சாத்துக்குடி, அன் னாசி போன்ற பழங்களில் வைட்டமின் சி அதிகம். முளைவிட்ட தானியங்கள், வேர்க் கடலை, ஈஸ்ட், அவரை, துவரை, சோயா பீன்ஸ், பீட்ருட் போன்றவற்றில் ஃபோ லிக் அமிலம் அதிகம்.


வெல்லத்தை விரும்புங்கள்!

வெல்லத்தில் இரும்புச்சத்து அதிகம். ஆகவே, வெல்லத்தில் செய்யப்பட்ட கடலைமிட்டாய், எள்ளுருண்டை போன்ற வற்றை தினமும் சாப்பிடலாம். தேனில் ஊறவைத்த பேரீச்சைகளைத் தினமும் சாப்பிட்டுவர, இரத்தம் பெருகும். வாரம் இருமுறை ஈரல் அல்லது மீன் சாப்பிடுவது நல்லது. தினமும் 500 மி.லி. பால், ஒரு முட்டை சாப்பிட்டுவர இரத்தம் சரியாக உற்பத்தியாகும்.

குடல்புழுவுக்கு மருந்து!

என்னதான் சத்துள்ள உணவுகளைச் சாப்பிட்டாலும் குடலில் புழு இருந்தால் அந்தச் சத்துகளைப் புழு சாப்பிட்டுவிடும். ஆகவே, குழந்தைகளுக்கு 'அல்பெண்ட சால்' 'மெபண்டசால்' மருந்துகளில் ஒன்றை, மூன்று மாதங்களுக்கு ஒருமுறை தர வேண்டும். கைகளைச் சுத்தமாக வைத்துக் கொள்வதும், வெளி இடங்களுக்குச் செல் லும்போது காலில் காலணி அணிந்து கொள்வதும் குடல்புழுக்கள் ஏற்படுவதைத் தடுக்கின்ற பிற வழிமுறைகள். ●

வாழ்த்துகள்!



பெயரைச் சொல்; பரிசை வெல்-6-ல் கலந்து கொண்டு சரியான விடைகளை நூற்றுக்கணக்கானோர் அனுப்பி இருந் தனர். ஆகவே, பரிசுத் தொகையான ஆயிரம் ரூபாயை, குலுக்கல் மூலம் பத்துப் பேருக்கு, தலா ரூ.100/- வீதம் வழங்குகிறோம்.

சரியான விடைகள் : 1. ஜான் டால்டன் 2. விக்டோரியா ரெஜியா 3. அடாக்ஸ்

பரிசு பெறுவோர் : 1. பா.ரூபிகுஷா, கரூர் 2. பா. சுந்தர பாண்டியன், பெண்ணாடம் 3. சு. முத்துக்குமார், கொத்தப்பட்டி 4. கே.யோகேஸ்வரி, சுவாமிமலை 5. ஜி.ஆர். விக்ரம், பொள்ளாச்சி 7. எம்.ஜி. ரஞ்சித் குமார், பல்லடம், 8. ரா.கோபாலகிருஷ்ணன், ஆடுதுறை 9. எஸ்.கே.ஸ்ரீவித்யா, நெய்வேலி 10. எஸ்.கே.குமரகுருபரன், ஈரோடு.

உங்கள் கவனத்துக்கு!

● சிறுவர் சங்க உறுப்பினராவதற்குக் குறைந்தபட்சம் ஐந்து வயதாகியிருக்க வேண்டும்.

● பட்டியல் பகுதியில் கொடுக்கப் பட்டுள்ள கூப்பனை (பக்கம் 59) நிரப்பி, புகைப்படத்தை இணைத்து அனுப்புங் கள். (ஜெராக்ஸ் எடுப்பதைத் தவிர்க்க வும்.)

● **சிறுவர் சங்கக் கூப்பனை அனுப் பும்போது, அதில் புகைப்படத்தை ஒட்டி அனுப்புங்கள். புகைப்படம் இல்லா மல், அனுப்பப்படும் கூப்பன்கள் பரிசீலிக்கப்பட மாட்டாது.**



டியர் குட்டீஸ்...

● உறுப்பினர் சங்கத்தில் உங்கள் புகைப் படம் இடம்பெற்றுவிட்டது என்றால், அந்தப் புகைப்படத்தின் கீழ் குறிப் பிடப்பட்ட எண் தான் உங்களுடைய உறுப்பினர் எண். எனவே, உறுப்பினர் அட்டை கிடைக்கப் பெறாதவர்கள், அந்த எண்ணைக் குறிப்பிட்டுத் தங்கள் படைப்புகளை அனுப்பலாம்!

● முதல் வகுப்பு முதல் மேல் நிலைப் பள்ளி வரை பயிலும் அனைவரும் உறுப் பினர் சங்கத்தில் இடம்பெற முடியும்.

● இதற்கு எந்தக் கட்டணமும் கிடை யாது.

● நீங்கள் உறுப்பினர் எனில், படைப்புகளை அனுப்பும்போது உங்களுக்கான உறுப்பினர் எண்ணைக் குறிப்பிட மறக்காதீர்கள்.

● **ஏற்கெனவே உறுப்பினர் சங் கத்தில் இடம்பெற்றவர்கள் மீண்டும் சிறுவர் சங்கக் கூப்பனை அனுப்ப வேண்டாம்.**

● உறுப்பினர் அல்லாதவரும் தங்கள் படைப்புகளை எழுதி அனுப்பலாம். சில குறிப்பிட்ட போட்டிகளில், உறுப்பினர்கள் மட்டுமே கலந்து கொள்ள முடியும்.

● **மாணவர்கள் தங்கள் படைப்புகளின் பின்பக்கம், பெயர், வகுப்பு, பள்ளி, ஊர், உறுப்பினர் எண் ஆகியவற்றையும், வீட்டு முகவரியையும் தெளிவாக எழுதி அனுப்பவும்.**

● **பிறர் எழுதி வெளியான கதை, கட்டுரை, கவிதை... போன்றவற்றை, மீண்டும் உங்கள் பெயரில் எழுதி அனுப்பாதீர்கள். இது மிகத் தவறு.**

● நீங்கள் அனுப்பும் கதை, கட்டுரை, கவிதை போன்றவை உங்கள் சொந்தப் படைப்பாக இருக்க வேண்டும் என்பது மிக முக்கியம்.

ஆசிரியர், கோகுலம்
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32



குழந்தை கவிஞர் அழ. வள்ளியப்பா நினைவுச் சிறுகதைப் போட்டி முடிவுகள் -2010

அருமைக் குழந்தைகளே,

இந்த வருடமும் நூற்றுக் கணக்கானோர் சிறுதைப் போட்டியில் பங்கு பெற்று அசத்தினார்கள். ராஜா ராணி, புலி சிங்கம் என்று கதா பாத்திரங்களைக் கொண்டும், நடைமுறை வாழ்வை ஒட்டியும் அந்தக் கதைகள் அமைந்திருந்தன. குறிப்பாக, சென்னை நாயக்கன் பட்டியில் உள்ள அரசு கள்ளர் உயர்நிலைப் பள்ளியில் இருந்து 24 பேர் பங்கேற்றிருந்தனர் என்பது பெரிதும் உற்சாகமூட்டியது. 'குழந்தைகளின் எழுத்தாற்றலை, சிந்தனையை ஆர்வத்தைத் தூண்ட வேண்டும்; மேலும் பரிமளிக்கச் செய்ய வேண்டும்' என்ற எங்கள் எண்ணத்துக்கு குழந்தைகள் தந்த பதில்தான், இத்தனைக் கதைகளும்! இந்தக் கதைகளைக் கவனமுடன் பரிசீலித்து, வெற்றியாளர்களைத் தேர்வு செய்தார் அமிர்தம் சூர்யா.

* கவிஞரும் எழுத்தாளருமான அமிர்தம் சூர்யா கல்கி வார இதழில் உதவி ஆசிரியராகப் பணியாற்றி வருகிறார்.
* 'மனிதம்' என்ற அறக்கட்டளை மூலம், சிறுவர்களுக்கான கதை எழுதும் ஆற்றலை வளர்க்க கதைப் பயிற்சி முகாம் நடத்தி, மாநகராட்சிப் பள்ளி சிறுவர்கள் எழுதிய கதையை புத்தகமாகத் தொகுத்து, மீண்டும் அவர்களையே வாசிக்க வைத்து, விமர்சனக் கூட்டம் நடத்தும் சமூகப் பணியாற்றி வருகிறார்.
* 'சகோசிகா' என்ற சமூக நிறுவனத்துடன் இணைந்து சிறுவர்களைக் கொண்ட ஆசிரியர் குழு அமைத்து, சிறுவர்களுக்கான இதழை நடத்த வழிகாட்டுதல் செய்கிறார்.
* சிறுவர் இலக்கியத்தின்பால்

அக்கறை கொண்டுள்ள இவர் நடுவராக இருந்து தேர்வு செய்த கதைகளும், அதற்கான காரணங்களும் வருமாறு :

போட்டி முடிவுகள் :

முதல் பரிசு ரூபாய் 1000/- பெறும் கதை: சமம்.

எழுதியவர் : பி.கவிப்பரியா, பத்தாம் வகுப்பு, அரசு கள்ளர் உயர்நிலைப் பள்ளி, சென்னம நாயக்கன்பட்டி

ஆணையும் பெண்ணையும் சமமாகப் பாவிக்கவேண்டும் என்கிற கருத்தை, பெற்றோர்களுக்கு போதிக்கும் ஒரு மாணவியின் இயல்பான நடையில் உள்ள கதை இது. கதையும் கருத்தும் சமமாக உள்ளது தலைப்பைப் போலவே.

இரண்டாம் பரிசு ரூபாய் 500/- பெறும் கதை : இழப்பின் மறுபக்கம். எழுதியவர் : ஜா.நந்தா, பதினொராம் வகுப்பு, பெரியார் மணியம்மை பெண்கள் மேல்நிலைப் பள்ளி, சுந்தர் நகர், திருச்சி

கதையின் கருவை தலைப்பே சொல்லி விடுகிறது. செருப்பை தொலைத்த ஒரு பெண் அந்த இழப்பின் பின்னால் இருக்கும் விஷயத்தை யோசிக்கிறாள்; அலசுகிறாள்.

மூன்றாம் பரிசு ரூபாய் 250/-பரிசு பெறும் கதைகள் :

1. இனிய இனியா. எழுதியவர் : யாழினி அன்புமணி, பதினொராம் வகுப்பு, பாரதி வித்யாபவன், ஈரோடு

நாய்க்குட்டியும் வேப்ப மரமும் இனிய பெண் இனியாவைக் காப்பாற்றச் சொல்லி கடவுளுக்கே இ-மெயில் அனுப்புவதாக துவங்கும் கதை. சுவாரசியமான முயற்சி.

2. பாசம். எழுதியவர் : எஸ்.பாப்பாத்தி, பத்தாம் வகுப்பு, அரசு கள்ளர் உயர்நிலைப் பள்ளி, சென்னம நாயக்கன்பட்டி

தன்னோடு தொடர்ந்து சண்டையிட்டு அடிக்கும் சகோதரிக்கு, தொடர்ந்து சண்டைக்கு பதிலாக பாசத்தை காட்டும் அகிம்சை சகோதரியின் கதை.

வெற்றி பெற்றவர்களுக்குப் பாராட்டுகள்! பங்கேற்ற அனைவருக்கும் வாழ்த்துக்கள்.

- **ஆசிரியர்**

* அமிர்தம் சூர்யா



தாத்தா வீட்டுக்குப்போவது என்றால் எப்போதும் சந்தோஷம்தான். காரணம், எங்களுக்குச் சமமாய், தாத்தாவும் புதிர் சொல்லி விளையாடுவார்; கைகுலுக்கிப் பாராட்டுவார். அந்த நினைப்போடுதான் தாத்தா வீட்டுக்கு வந்தோம். அதேபோல், குளித்து டிபன் சாப்பிட்டதும் தாத்தா கேட்டார். ''என்ன ரெடியா?''

''ம்'' என்றோம் உற்சாகமாக, திண்ணையில் அமர்ந்தோம். நான், ரவிக்குட்டி, சிவா, கீதா. தாத்தா ஆரம்பித்தார்.

''28 தேதி உள்ள மாதங்கள் எத்தனை? அருண் உனக்குத் தெரியுமா?''

''ம், பிப்ரவரி,'' என்றேன். ''தப்பு. எல்லா மாதத்துலேயும் 28 நாள் உண்டு'' என்ற தாத்தா அடுத்துக் கேட்டார். ''32 தேதியுள்ள மாதம் எது?''

''தமிழில் ஆனி மாதம்!'' என்றாள் கீதா. ''பலே, அடுத்த புதிரை யார் சொல்றது?'' என்றார் தாத்தா. ''நான்!'' என்ற ரவிக்குட்டி சொன்னான் :

''வாத்துக்கள் எல்லாம் ஏன் வரிசையா ஒன்னுக்கு பின்னால ஒன்னா போகுது?''

நாங்கள் சொன்ன எந்த பதிலும் சரியில்லை என்ற ரவி சொன்னான், ''முன்னால போற வாத்து 'back... back'ன்னு கத்திக்கிட்டுப் போகுதில்ல. அதனால தான்..'' எங்கள் சிரிப்பு அடங்க சிறிது நேரமானது.



அடுத்து நான் சொன்னேன் ''ரோடை (road) எப்படிச் சுலபமா அகலமாக்குவது?''

யாருக்கும் தெரியவில்லை. ''roadக்கு முன்னாடி 'b' சேர்த்தால் broad (அகலம்) ஆகிடும்.'' 'ஹே' என்று சிரித்தனர் அனைவரும். தொடர்ந்தாள் கீதா : ''ஒரு பையனிடம் மூன்று பேர் மூன்று கேள்விகள் கேட்குறாங்க. ஒருவர், 'பையில் என்ன வாங்கிட்டுப் போறே?'ன்னு கேட்டார். அடுத்தவர் 'இப்ப என்ன டயம்?

வீடு!

(time)ன்னார். வேறொருத்தர் 'உன்னுடைய சட்டை என்ன கலர்?'னு கேட்டார். மூவருக்கும் அந்தப் பையன் ஒரே பதில் அது என்ன?''

யாருக்கும் தெரியவில்லை. கீதாவே சொன்னாள். ''ஆரஞ்சு.''

அடுத்து சிவா சொன்னான் : ''ஒரு கி.மீ. நீள முள்ள ரயில், ஒரு கி.மீ. நீள முள்ள சுரங்கப் பாதையில் நுழைகிறது. ரயிலின் வேகம் மணிக்கு ஒரு கி.மீ. அப்படியானால், ரயில் சுரங்கப் பாதையை விட்டு வெளியில் வர எவ்வளவு நேரமாகும்?''

''ஒரு மணி நேரம்,'' என்று நாங்கள் கூறினோம். ''இல்லை; ரயிலின் மொத்த நீளமான ஒரு கிலோ மீட்டரும் சுரங்கத்தை விட்டு வெளியில் வர 2 மணி நேரமாகும்.'' என்றான் சிவா.

அடுத்து ரவிக்குட்டி சொன்னான் : ''ஒரு குழாயின் கீழ் ஒரு வாளி வைக்கப்பட்டு, தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. ஆனால் ரொம்ப நேரமாகியும் வாளி நிறையவில்லை. ஏன்?''

'குழாயில் தண்ணீர் வரவில்லை'. 'பக்கெட் ஓட்டை' என்ற எங்களின் பதில்களையெல்லாம் நிராகரித்துவிட்டு ரவிக்குட்டி சொன்னான் :

''வாளியை தலைகீழாக வைத்து விட்டார்கள்.''

தாத்தா ஆச்சரியத்தில் ரவிக்குட்டியின் கையைப் பிடித்து குலுக்கிப்பாராட்டினார்.

அடுத்த புதிர் சிவாவிடமிருந்து வந்தது. 'A, B என்ற இருவரும் சைக்கிள் பந்தயத்தில் ஒரே அளவு தூரத்தைக் கடந்தார்கள். A 80 நிமிடத்திலும், B 1 மணி 20 நிமிடத்திலும், சென்றார்கள். இருவரில் வேகமாகச் சென்றது யார்?''

''B-தான் விரைவாக சென்றவர்'' என்று கீதா கூற, சிவா சொன்னான். ''இருவர் எடுத்துக்கொண்டதும் ஒரே நேரந்தான். 80 நிமிடம் என்றாலும் 1 மணி 20 நிமிடம் என்றாலும் ஒன்றுதான்.''

விளையாடியதில் நேரம் போனதே தெரியவில்லை. சாப்பாட்டு நேரம் வந்துவிட்டது. அப்போது ரவிக்குட்டி சொன்னான் : ''ஒரு வாளி நிறைய தண்ணீர் இருக்கு. அதில் எதைப் போட்டால் தண்ணீர் குறையும்?''

நாங்கள் எல்லோரும், ''ஸ்பான்ச், செங்கல், பேப்பர்'' என்று என்னவெல்லாமோ சொன்னோம்.

'அதெல்லாம் இல்லை' என்ற ரவிக்குட்டி சொன்னான். ''வாளியில் ஓட்டை போட்டால் தண்ணீர் குறையும்!'' சொல்லிவிட்டு அவன் ஓட, நாங்கள் துரத்திக் கொண்டு ஓடினோம். ●

– மு.கருப்பையா

சூரியனின் தூரம்!

கதை: சித்ரா சிவகுமார், ஹாங்காங்   படம்: பிள்ளை





தேடி வரும் கோகுலம்; படிக்கப் படிக்க குதூகலம்!

பெயர் : ....

முகவரி : ....

....

....

ஒரு வருட சந்தா ரூ.96/-. இதை டிமாண்ட் டிராஃப்ட் அல்லது மணியார்டராக அனுப்புங்கள். இந்தத் தொகை 'Gokulam Tamil' என்ற பெயருக்கு இருக்க வேண்டும். உள்ளூர்க் காசோலைகள் மட்டுமே ஏற்கப்படும்.

அனுப்பவேண்டிய முகவரி :

சர்க்குலேஷன் மானேஜர், கோகுலம் (தமிழ்), கல்கி பில்டிங்ஸ்,

47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல்,

சென்னை - 600 032

சிறிய கண்கள். காதே இல்லாத தலை. பருத்த உடல், மடிப்பு மடிப்பாகத் தொங்கும் தோல் - இப்படிக் கவரும் தன்மையற்ற பிராணிகளுள் ஒன்று வால்ரஸ். சுமார் 12 அடி நீளம் கொண்டது. பனிபடர்ந்த ஆர்க்டிக் பகுதிகளில் வாழும் இந்த விலங்கு, பார்வைக்கு ரொம்ப சாது; சோம்பேறியைப் போல் கிடக்கும். ஆனால் கோபம் வந்தால்... அவ்வளவுதான்.

எதிரியுடன் ஒரு வால்ரஸ் சண்டை போடும்போது, துணைக்கு இதன் நண்பர்களும் சேர்ந்து கொள்ளும். அவ்வளவு மூர்க்கம் உண்டு இதற்கு.

இதன் வாயின் இரு புறங்களிலும் இரு தந்தங்கள் இருக்கின்றன. 1 - 2 அடி நீள முள்ள இந்தத் தந்தங்கள் ஆறு கிலோ எடையுள்ளவை. சண்டையிடுவதற்கு மட்டுமல்லாது, சிப்பிகளைத் தோண்டி எடுக்கவும் இவை உபயோகமாக இருக்கின்றன. பசி எடுத்தால் இது கடலடிக்கு

பார்க்க சாது: பாய்ந்தால் வால்ரஸ்!







மூழ்கிச் செல்லும். அறுபது அடியானாலும் சரி, முன்னூறு அடியானாலும் சரி; தலைகீழாகக் கொம்பால் கீறிக் கொண்டே போகும். அப்போது கிடைக்கும் சிப்பி, நட்சத்திர மீன், நத்தை, நண்டு, கடல் வெள்ளரி... என்று எல்லாம் இதன் வாய்க்குள்தான்.

பொதுவாக, இது சோம்பல் மிகுந்த பிராணி. பனிக்கட்டி மேல் படுத்துக் கிடக்கும். அந்தப் பனிக்கட்டி ஐம்பது மைல் நகர்ந்து போனால்கூட, இது கவலைப்படாது. துடுப்புகளைப் போலிருக்கும் கால்களின் உதவியால் வெகு வேகமாக நீந்தும். ஆனால் அதிக நேரம் நீந்த முடியாது. சோர்வடைந்துவிடும்; அப்படிக் களைப்படைந்தால், நீரில் மூழ்கி இறந்துவிடும்.


வால்ரஸ் ஒரு முறை ஒரு குட்டிதான் போடும். தன் குட்டிகளைத் தவிர, பிற குட்டிகளையும் அன்போடு பாதுகாக்கும் தன்மை இதற்குண்டு.

குட்டி வால்ரஸ், தாய் நீந்தும் போது அதன் கழுத்தின் மீது ஏறிச்சவாரி செய்யும். இரண்டு வயது வரை பால் குடிக்கும். மூன்று முதல் நான்கு அங்குல நீளம் கொம்புகள் வளர்ந்த பின்னரே, பால் குடிப்பதை நிறுத்தும்.

Killer whale என்ற ஒரு வகை திமிங்கலம், துருவக் கரடி ஆகியவை இதன் முக்கியமான எதிரிகள். இவையன்றி, எஸ்கிமோக்கள் உணவுக்காக இவற்றை வேட்டையாடுவார்கள். அது மட்டுமல்ல; தந்தம் தோல், எண்ணெய் இவற்றுக்காகவும் இவை வேட்டையாடப்படுகின்றன.

இதனால், வால்ரஸ் வேட்டைக்கும் வால்ரஸ் தந்தம் விற்பனை செய்வதற்கும் சர்வதேச அளவில் கட்டுப்பாடு விதிக்கப் பட்டுள்ளது.

- எஸ்.சரஸ்வதி,
பெரிய காஞ்சிபுரம்



எங்கும்

நெருப்புப் பூக்கள் வானத்தில்
நிறம் நிறமாக உதிர்கிறதே,
சீறிப் பாய்ந்த ராக்கெட்தான்
சிரிப்பைச் சிந்தி மகிழ்கிறதோ?

பூக்கள் தீப்பொறி ஊற்றுகளாய்
பீறிட்டெழுந்து விழுகிறதே,
புதைவாணத்துச் சிறையிருந்து
விடுதலை பெற்ற வேகமிதோ?

தரணியும் கதிரைச் சுற்றுமுன்னே
தன்னைத்தானே சுற்றுதல் போல்,
தரையில் சக்கரம் சுழன்றேதான்
யாரைச் சுற்றப் போகிறது?

வண்ண வண்ணத் தீக்குச்சி
வளர்ந்த சிறுவர் கைகளிலே
எண்ணம் உயர உயரத்தான்
எங்கும் இன்பம் என்கிறதோ?

- ஆர்.பி.சாரதி

நேரு மாமா

அன்னை பாரத பூமியிலே
அலகாபாத்தில் பிறந்தவராம்
என்றும் மங்காப் புகழுடைய
எங்கள் மாமா நேருஜி!

செல்வக் குடியில் பிறந்தாலும்
செருக்கே இல்லை! அரசியலில்
கல்வி கற்று முடிக்கும்வரை
கலந்திட வில்லை நேருஜி!

படிப்பை முடித்தார்; நாட்டுமக்கள்
படும்துயர் கண்டார்! தாய்நாட்டின்



இன்பம்!

விடுதலைக்கான இயக்கத்திலே
வீரர் நேரு சேர்ந்திட்டார்!

ஆங்கில அரசினர் அடித்தனரே!
அடைத்தனர் சிறையில் வதைத்தனரே!
தாங்கிக் கொண்டார் அவற்றினையே
தளரா நெஞ்சுடன் நேருஜி!

சுதந்திரம் பெற்ற பாரதத்தில்
சோர்வே இன்றி உழைத்திட்டார்!
பொதுநலத் தொண்டே தன்னலமாய்
போற்றி வாழ்ந்த நேருஜி!

உலகில் அமைதி காத்திடவே
ஓயா துழைத்தார் இறுதிவரை
பலரும் போற்ற வாழ்ந்தவராம்
பண்பிற் சிறந்த நேருஜி!

குழந்தைகளிடத்தில் பேரன்பு
கொண்டவர் பிறந்த நாளதனை
குழந்தைகள் தினமாய்ப் போற்றிடவே
கூறினார் எங்கள் நேருஜி!

- புலேந்திரன்

மண்வளம் காக்க!

தத்தித் தாவும் தவளையாரே
எங்கே போறீங்க?
தண்ணீர் குளத்தில் குறைந்துவிட்டால்
என்ன செய்வீங்க?

கத்திக் கத்தி பாடுவதும் யாருக்காக?
கன மழையிலே கூடுவதும் எதற்காக?
சத்தம் போட்டுப் பாடுவதாலே
சங்கடந்தானே?
சரியாய் பாம்பும் அறிந்துகொண்டு
சாப்பிட வருமே?

மொத்தமாக குளத்தையெல்லாம்
பட்டாப் போட்டு
மாடி வீடாய் மாற்றிவிட்டார்
மடையர்தானே?

'மழைநீரை சேமி சேமி!' என்று
பாடுகிறாயா?
'மண்வளமே முதன்மை' என்று
பாடுகிறாயா?

சேர்ந்து நீங்கள் பாடுவதொருவகை
ஆர்ப்பாட்டமா?
நீர்நிலைகளைக் காப்பதற்கே
போராட்டமா?

- மு.பாலசுப்பிரமணியன்
புதுச்சேரி




"ரோஸாலி..."

"யெஸ் ப்ரொஃபஸர்" பரபரப்பாக ஓடி வந்தாள் ரோஸாலி ரெய்னர். "கூப்டீங்களா?"

"ஆமா. உட்காரு" என்றார் ஜான் வாட்ஸன். "இன்னிக்கு நாம ஒரு புதுப் பரிசோதனையை ஆரம்பிக்கப் போகிறோம். அதைப்பத்திப் பேசறதுக்காகத் தான் உன்னைக் கூப்பிட்டேன்!"

"சொல்லுங்க ப்ரொஃபஸர்" ரோஸாலி தன்னுடைய பையிலிருந்து ஒரு நோட்டுப் புத்தகத்தை எடுத்துப் பிரித்தாள். விறுவிறுவென்று எழுத ஆரம்பித்தாள்.

"இந்தப் பரிசோதனையோட பேரு லிட்டில் ஆல்பர்ட்!"

"லிட்டில் ஆல்பர்ட்? அது யாரு?"

"அந்தப் பையனோட நிஜப் பேரு நமக்கு முக்கியமில்லை. நம்மைப் பொறுத்தவரை அவன் லிட்டில் ஆல்பர்ட். ஓகேயா?"

"ஓகே" என்று புன்னகைத்த ரோஸாலி கேட்டாள், "இப்போ அவன் எங்கே இருக்கான்?"

"அதோ, அந்தத் தொட்டில்ல..."

ஆச்சர்யத்தோடு பார்த்தாள் ரோஸாலி. அங்கே ஒரு சின்னக் குழந்தை அமைதியாக உறங்கிக் கொண்டிருந்தது.

"என்ன ப்ரொஃபஸர்? இந்தக் குழந்தையைப் பார்த்தா ஒரு வயசுகூட இருக்காது போலிருக்கே."


"ஆமாம். இப்போ இவன் தூங்கி எழுந்திருக்கறதுக்குள்ள நான் சொல்ற பொருள்களுக்கெல்லாம் நீ ஏற்பாடு செய்யணும்."

"சொல்லுங்க ப்ரொஃபஸர்!"

"முதல்ல ஒரு க்ளீன் டேபிள். அப்புறம் ஒரு வெள்ளை எலி, முயல், குரங்கு, சில முகமூடிங்க, பழைய நியூஸ் பேப்பர்ஸ், தீப்பெட்டி, உலோக பைப் ஒண்ணு, பெரிய சுத்தியல் ஒண்ணு ..."

அந்தப் பட்டியலைக் கேட்டதும் ரோஸாலிக்கு ஒன்றும் புரியவில்லை.

லிட்டில்



என்றாலும், ''எல்லாத்துக்கும் உடனே ஏற்பாடு செஞ்சுடறேன் ப்ரொஃபஸர்'' என்று உற்சாகமாக எழுந்துகொண்டாள்.

அடுத்த ஒரு மணி நேரத்தில் வாட்ஸன் கேட்ட எல்லாப் பொருள்களும் தயாராகியிருந்தன. லிட்டில் ஆல்பர்ட்டும் கண் விழித்து, ஒரு பிஸ்கெட்டை மென்று கொண்டிருந்தான்.

'இந்தப் பொடியனை வைத்துக் கொண்டு ப்ரொஃபஸர் என்ன ஆராய்ச்சி செய்யப்போகிறார்?' கேள்வி புரண்டது ரோஸாலிக்கு.

ஜான் வாட்ஸன் மனவியல் நிபுணர். ஏற்கெனவே பலவிதமான பரிசோதனைகளைச் செய்தவர். மனித மனத்தின் இயல்பு, அது இயங்கும் விதம் பற்றிய பல ரகசியங்களை அவர் கண்டுபிடித்திருந்தார்.

ஆல்பர்ட்!

இப்போது ஒரு எட்டு மாதக் குழந்தையை வைத்து, ஒரு புதுப்பரிசோதனையை ஆரம்பித்துவிட்டார்.

முதலில் அந்தக் குழந்தையை மேஜைமீது உட்காரச் செய்தார். பக்கத்தில் ஒரு வெள்ளை எலியை வைத்தார்.



குழந்தை எலியைப் பார்த்துப் பயப்படவில்லை. முத்துப் பற்களைக் காட்டிச் சிரித்தது. அதோடு மழலையில் ஏதோ பேசியது.

சிறிது நேரம் கழித்து, எலியை எடுத்துவிட்டு அங்கே ஒரு முயலை வைத்தார். இப்போதும் குழந்தை பயப்படவில்லை. நன்றாகச் சிரித்தது.

அடுத்து முயலுக்குப் பதில் ஒரு குரங்கைக் காண்பித்தார். விதவிதமான முகமூடிகளை அணிந்துகொண்டு அதன் முன்னே வந்து நின்றார். பழைய செய்தித்தாள்களைக் கொளுத்திக் காட்டினார்.

இவை எதுவும் லிட்டில் ஆல்பர்ட்டைப் பாதிக்கவில்லை. பெரிய வேடிக்கை என்பது போலச் சிரித்தபடி இருந்தான்.

இந்தப் பரிசோதனைகளைச் சில நாள்களுக்குத் தொடர்ந்தார் வாட்ஸன். குழந்தை எல்லாவிதத்திலும் உற்சாகமாக இருக்கும்படி பார்த்துக்கொண்டார்.

திடீரென்று ஒருநாள், பரிசோதனையில் ஒரு சிறிய மாற்றம்.

வழக்கம்போல் மேஜைமீது குழந்தை. பக்கத்தில் ஒரு வெள்ளை எலி. ஆனால் இப்போது, குழந்தையின் முதுகுக்குப் பின்னாலிருந்து ஓர் உலோகக் குழாயைச் சுத்தியலால் ஓங்கித் தட்டினார் ஜான் வாட்ஸன். அவ்வளவுதான். அந்தச் சத்தத்தை எதிர்பார்க்காத குழந்தை, கதறி அழ ஆரம்பித்துவிட்டது. சட்டென்று பாய்ந்து சென்ற ரோஸாலி குழந்தையைத் தூக்கிக் கொண்டாள். அதைச் சமாதானப் படுத்த ஆரம்பித்தாள்.

கொஞ்ச நேரம் கழித்து, மீண்டும் வெள்ளை எலியை அதன் முன் வைத்தார் ஜான் வாட்ஸன். குழந்தை எலியைச் சந்தேகமாகப் பார்க்க, மறுபடி பின்னாலிருந்து பெரிய சத்தம் எழுப்பினார். குழந்தை மீண்டும் பயந்து அழத்தொடங்கியது.

என். சொக்கன்

இப்படிக் கொஞ்சநாள் செய்தபிறகு, குழந்தைக்கு வெள்ளை எலி என்றாலே பயமாகிவிட்டது. சத்தம் கேட்கிறதோ, இல்லையோ, எலியைக் கண்டாலே பதறி அழ ஆரம்பித்தான்.

சிலநாள் கழித்து, நிலைமை இன்னும் மோசமாகிவிட்டது. எலி மட்டுமல்ல; வெள்ளை நிறத்தில் எதைப் பார்த்தாலும் அவன் பயந்து அலறத் தொடங்கினான்.

அதற்குமேல் ரோஸாலியால் பொறுக்க முடியவில்லை. "ப்ரொஃபஸர், ஏன் அந்தக் குழந்தையை இப்படிக் கொடுமைப் படுத்தறீங்க?" என்று வெடித்தாள்.

"ரோஸாலி, உனக்குப் புரியலையா? மனுஷ மனசோட ஒரு மிக முக்கியமான ரகசியத்தை - ஆதாரபூர்வமா நாம நிரூபிச்சிருக்கோம்," என்றார் ஜான் வாட்சன்.

"லிட்டில் ஆல்பர்ட் எலியைப் பார்த்துப் பயப்படலை, அதோடு கேட்கிற அந்தச் சத்தம், அதை நினைச்சுத்தான் பயப்படறான். இப்போ அவன் முன்னாடி அந்த எலி இல்லை, சத்தமும் இல்லை. ஆனாலும் வெள்ளைக் கலரைப் பார்த்தாலே அவனுக்கு அந்த பயம் வந்துடுது. வெள்ளைன்னா பயம்ன்னு அவனோட மனசுக்குப் பழகிப்போச்சு, இதுக்குப் பேரு Classical Conditioning" என்றார் வாட்சன்.


ஜான் வாட்சன்

மனித மனத்தில் என்ன மாதிரியான சிந்தனைகள் எப்படிப்பட்ட உணர்வுகளை உருவாக்கக்கூடும் என்கிற பல ஆராய்ச்சிகளுக்கு ஆரம்பப் புள்ளி லிட்டில் ஆல்பர்ட்தான்!

சுமார் 90 வருடங்களுக்கு முன் நடந்த இந்தப் பரிசோதனை, இன்றும் மனவியல் மாணவர்களுக்குத் தவறாமல் சொல்லித் தரப்படுகிறது. 'ஜான் வாட்சன் ஒரு சின்னக் குழந்தையை இப்படிக் கொடுமைப்படுத்தியது நியாயமில்லை' என்று பலர் கண்டனம் தெரிவித்திருந்தாலும், அறிவியல் உலகைப் பொறுத்த வரை இது ஒரு முக்கியமான மைல் கல். மனித மனத்தில் என்ன மாதிரியான சிந்தனைகள் எப்படிப்பட்ட உணர்வுகளை உருவாக்கக்கூடும் என்கிற பல ஆராய்ச்சிகளுக்கு ஆரம்பப் புள்ளி, லிட்டில் ஆல்பர்ட்தான்!

அது இருக்கட்டும்; நீங்கள் எதைப் பார்த்துப் பயப்படுவீர்கள்? அது நிஜமான பயமா? அல்லது இல்லாத ஒன்றைக் கற்பனை செய்து கொண்டு பயப்படுகிறீர்களா? கொஞ்சம் யோசித்தால், எப்பேர்ப்பட்ட பயத்தையும் ஜெயித்துவிடலாம்! ●

கோகுலம் டைஜஸ்ட்



இந்த டைஜஸ்டில்...

கடல் பாடும்

மிகப் பழைமையான வரலாற்றுச் சிறப்புடைய ஊர் கன்னியாகுமரி. சமீபத்தில் இங்கு சுற்றுலா வாய்ப்பு அமைந்தது. இந்தப் பகுதியைச் சூழ்ந்திருந்த நிலப் பகுதிகள் கடல்களுக்குள் மூழ்கிவிட்டன என்பது ஆய்வாளர்கள் கருத்து. அந்தப் பகுதியை லெமூரியாக் கண்டம் என்று குறிப்பிடுவர்.



✱ பகவதி அம்மன்


''கன்னியாகுமரி என்றவுடனேயே நினைவுக்கு வருவது சூரிய உதயம் தான். இதைக் காணவே, வெளிநாட்டிலிருந்தும், உள்நாட்டிலிருந்தும் இங்கே பயணிகள் வந்து குவிந்த வண்ணம் உள்ளனர்.

இருள் பிரியாத வேளையில், பொன்னொளிக் கற்றைகளை விசிறியபடி முகம் காட்டும் சூரியனைக் காண்பது மிகப் பெரும் ஆனந்தம்! அலையொலியைத் தவிர, பிற சப்தங்களில்லாத அந்தச் சூழலை ஒருமுறையாவது அனுபவிக்க வேண்டும். அவ்வளவு பேரழகு!

காலமெல்லாம் அகிம்சையைப் போதித்த மகாத்மாவின் நினைவாக, மண்டபம் இங்கே அமைந்துள்ளது. 'உண்மையே பேசுங்கள்; அகிம்சையைப் பின்பற்றுங்கள்' என்று இரட்டை மந்திரத்தை வாழ்க்கையாகவே வாழ்ந்தவரை, மடியில் இட்டு முக்கடல்களும் தாலாட்டுவது போன்ற எண்ணம் ஏற்படுகிறது.

பக்தர்களைக் கவர்ந்திழுக்கும் பகவதி அம்மன் கோயில், புராதனமானது; கட்டடக்கலைச் சிறப்புடையது. இந்த அம்மனின் மூக்குத்தி ஒளியைக் கண்டு, கப்பல் தரைதட்டியதாகவும், அதன் பிறகே சன்னிதியின் வாயிற்புறத்தை மாற்றினார்கள் என்றும் சொல்வார்கள்.

வெறும் பக்தி மட்டும் போதாது; சமூகத்துக்கான சேவைகளைச் செய்ய



✱ காந்தி மண்டபம்

வேண்டியது அவசியம். சமூகத்தைப் பற்றிய அக்கறையையும், தொண்டினையும் புறக்கணிப்பது பக்தியாகாது என்று வாழ்ந்து காட்டிய சுவாமி விவேகானந்தரை நினைவுபடுத்துகிறது விவேகானந்தர் மண்டபம்! அதை அடைய, படகில் செல்லும்போது ஏற்ப

தாலாட்டு!

டும் பரவச அனுபவம் சிலிர்ப்பூட்டுவது!

ஒட்டுமொத்த உலகத்துக்கும் வாழும் வகையை எடுத்துக்காட்டிய வள்ளுவர் பெருமானின் மிகப் பெரிய சிலை அற்புதமானது. 'தோன்றிற் புகழோடு தோன்றுக' என்றுரைத்த வள்ளுவர், மகாத்மா, விவேகானந்தர் ஆகிய மூவரையும் ஒரே நேரத்தில் நினைக்கும்போது, பலரும் மரியாதை செலுத்தும்படி, பாராட்டும்படி வாழ வேண்டும் என்ற எண்ணம் ஏற்படுகிறது.

சிப்பிகள், கிளிஞ்சல்கள் இவற்றைக் கொண்டு, பலவிதமான கைவினைப் பொருள்கள் இங்கே செய்யப் பயன்படுகின்றன. மீன் பிடித்தல், ரப்பர் தொழிற்சாலைகள், கயிறு திரித்தல், மைதா தயாரிக்கும் தொழிற்சாலை இது போன்று பல தொழிற்சாலைகள் இம்மாவட்டத்தில் செயல்பட்டு வருகின்றன. சுசீந்திரம், பத்மநாபபுரம், அரண்மனை, திற்பரப்பு அருவி, பேச்சிப்பாறை அணைக்கட்டு, வட்டக்கோட்டை போன்ற மிகச் சிறந்த சுற்றுலாத் தலங்களும் உண்டு.

இவ்வளவையும் சுற்றிப் பார்த்தாலும், கண்ணை ஒரு கணம் மூடினால், பீறிடுவது அந்தச் சூர்யோதயமும், காந்தி மண்டபமும் தான்!

- ஏ.சுந்தரராஜன், உ. எண் 1156,
பு.தி.வ.ச.உ.நி.பள்ளி,
திருக்கழுக்குன்றம்



விவேகானந்தர் மண்டபம்

வள்ளுவர் சிலை

I 1.வாசலை வழிமறைக்கும் வெள்ளைக் காரன் - அவன் யார்?

2. உடம்பெல்லாம் சிவப்பு நிறம்; உச்சிக்குடுமி பச்சை நிறம் - அது என்ன?

3. தேவை என்றால் வீசி எறிவோம். தேவையில்லை என்றால் எடுத்து வைப் போம் - அது என்ன?

- ஆர்.பத்மா பிரியா, ஹூப்ளி

II 1. பலரிடம் உதை வாங்குவான்; ஒருமுறை கூட அழமாட்டான்! - அவன் யார்?

2. பல் துலக்காதவனுக்கு உடம்பெல் லாம் பற்கள் - அவன் யார்?

3. காலாறும் கப்பற்கால் கண்ணிரண் டும் கீரை விதை - அது என்ன?

4. தன்னை அழைத்தவரை தானே அழித்திடுவாள்? - அது என்ன?

5. சித்திரைப் பின்னல் கோட் டைக்குள்ளே போக வழியுண்டு, வர வழியில்லை - அது என்ன?


6. கண்ணைப் பறிக்கும், சிவப்பு வைரம். எடுக்கப் போனால், கடிக்கும் வைரம் - அது என்ன?

7.நீந்தத் தெரிந்தவனுக்கு, குளிக்கத் தெரியாது - அது என்ன?

8. பாம்பு போல் நீண்ட குருவி, பந்தலில் ஊஞ்சல் ஆடுது - அது என்ன?

- எஸ்.ஜெயந்தி,
பெரிய காஞ்சிபுரம்

கடிக்கும்



III 1. தலை இல்லாதவன்; தலை யைச் சுமப்பான் - அவன் யார்?

2. கண்ணுக்குத் தெரி யாதவன் உயிருக்குகந் தவன் - அது என்ன?

3. அரைத்தது முளைக்கும் பொரித்தது நடக்கும் - அவை என்ன?

- எஸ்.டில்லிபாபு,காஞ்சிபுரம்

IV 1. நோயின்றி மருந்து சாப்பிடுவான்; வாயின்றிக் கூச் சல் போடுவான் - அவன் யார்?

2. நடப்பான்; ஓடுவான்; கடிப் பான்; பேசமாட்டான் - அவன் யார்?

3. உயர பறக்கும்; ஊன்றுகோலில் நிற்கும் - அது என்ன?

- ஏ.சுலைஹத் ஃபைஹா,
உ. எண்998, இராமநாதபுரம்

V1. அந்தரத்திலே தொங்குது செம்பும் தண்ணீரும் - அது என்ன?

2. எல்லோரும் சொல்லும் எழுத்து; ஆனால் ஏட்டில் இல்லாத எழுத்து - அது என்ன?

- ஆர்.சீதாராமன்,
உ. எண் 449, மதுரை

VI1. ஒல்லி உடம்புக்காரி ஒய்யாரமாய் மணக்கிறாள் - அவள் யார்?

2. நடக்கத் தெரிந்தவனுக்கு உள்ளே வரத் தெரியாது - அவன் யார்?

3. அணிய முடியாத அணி - என்ன அணி?



வைரம்!

4. பாடத் தெரிந்தவளுக்கு வீடு கட்டத் தெரியாது - அவள் யார்?

- ம.அக்ஷயா,
உ. எண் 1346, அரூர்



விடைகள்: **I** 1.கோலம், 2.தக்காளிப்பழம், 3.மீன் பிடிக்கும் வலை

II 1.பந்து, 2.சீப்பு, 3.ஈ, 4.விஷம், 5.எலிப்பொறி, 6.நெருப்பு, 7.கப்பல், 8.புடலங்காய்

III 1. தலையணை, 2. காற்று, 3.பருத்தி விதை, கோழிக்குஞ்சு

IV 1.பட்டாசு, 2.செருப்பு, 3.கொடி

V 1. இளநீர், 2. தலையெழுத்து

VI 1. ஊதுபத்தி, 2.செருப்பு, 3.பலகணி, 4.குயில்


அறுந்த பட்டம் யாருடையது?



பாம்பை மிரட்டும் தவளை!

மழைக்காலம் என்றால், தவளைச் சங்கீதம் நினைவுக்கு வரும். அப்படிச் சத்தமிடுவதால், பாம்புக்குத் தன் இருப்பிடத்தைக் காட்டி, அதன் உணவாகிறது தவளை. அதனாலேயே 'நுணலும் தன் வாயால் கெடும்' என்ற பழமொழி உண்டானது. ஆனால், பாம்பே வெருண்டு ஒதுங்கும் அளவுக்கு விஷம் கொண்ட தவளைகளும் இருக்கின்றன.

மத்திய மற்றும் தென் அமெரிக்கப் பகுதிகளில் அந்தத் தவளைகளுக்கு டார்ட் (dart) என்று பெயர். விஷம் கொண்டவையும்கூட! இந்தத் தவளைகள், பச்சை, மஞ்சள், நீலம், இளஞ் சிவப்பு மற்றும் உடலில் கோடுகள் என்று பலவிதமாகக் காணப்படுகின்றன. 'பாம்புக்குப் பல்லிலே விஷம்; தேளுக்குக் கொடுக்கிலே விஷம்' என்பது வழக்கு மொழி. இந்தத் தவளையின் உடலே விஷத்தன்மை வாய்ந்தது என்கிறார்கள். இவற்றின் தோலில் இருந்து, வலி நிவாரணிக்கான மருந்து ஒன்றும் தயாரிக்கப்படுகிறது. Epibatidine என்னும் இந்த மருந்து, வலி நிவாரணியாகப் பயன்படுத்தப்படும் மார்ஃபினைவிட, இருநூறு மடங்கு சக்தி வாய்ந்தது என்கிறார்கள். எபிடோபேட்ஸ் ட்ரைகலர் (Epipedobates tricolor) என்னும் தவளையின் தோலில் இருந்து இந்த மருந்து தயாரிக்கப் படுகிறது.



இந்தத் தவளை இனங்களில் மிகக் கடுமையான விஷம் கொண்டது தங்க நிறம் கொண்ட விஷத்தவளை (Golden poison frog). இதன் அறிவியல் பெயர் phyllobates terribillis. 'ஒரு நேரத்தில் பத்து முதல் இருபது மனிதர்களைக் கொல்லும் அளவுக்கு விஷம் கொண்டது இந்தத் தவளை; இதைக் கண்டால், பாம்புகளே ஒதுங்கிப் போய்விடும்' என்றும் சொல்கிறார்கள்.



- எஸ்.சுப்ரியா,
உ. எண் 74,
சென்னை

காட்டில் ஜூரம்!

'ஒரு வாரமாக வருகிறேன், வருகிறேன்' என்று சொன்ன கழுதை அன்றும் வரவில்லை. என்ன செய்வது என்று யோசித்துக் கொண்டிருந்தது புலி. கடையில் சேரும் காலாவதியான உணவுப் பொருட்களை அவ்வப்போது எடுத்துக் கொண்டு போய், எங்காவது குழிதோண்டிப் புதைத்து வரும் கழுதை! ஒரு மாதமாக அது வராததால், ஏராளமான கெட்டுப்போன உணவுப் பொருட்கள் தேங்கிவிட்டன. என்ன செய்யலாம் என்று யோசித்துக் கொண்டிருந்த சமயத்தில் கேட்டது அந்தக் குரல் :

''என்ன முதலாளி, ஏதோ யோசனையாத் தெரியுது?''

கல்லாவில் அமர்ந்திருந்த புலி திரும்பியது. அங்கே வாயெல்லாம் பல்லாக நின்று கொண்டிருந்தது நரி.

''டேய், இந்த மூட்டைல முறுக்கு, தேன்குழல்னு ஏகப்பட்ட சாப்பிடற பண்டம் இருக்கு. எல்லாம் கெட்டுப் போனது. எங்கயாவது பொட்டல்ல குழி தோண்டிப் புதைக்கணும். செய்வியா?''

புலி கேட்டதும் 'சரி' என்றது நரி உற்சாகமாக. 'கொண்டு போய், வேறு கவரில்போட்டு விற்றுவிடலாம். நல்ல காசு கிடைக்கும்' என்று மனத்தில் திட்டமிட்டது.

''டேய் ஜாக்கிரதை. யாராவது சாப்பிட்டா வயிறு கெட்டுப் போகும். உடம்பும் கெடும். அதனால ஆழமா குழி தோண்டிப் புதைச்சுடு'' மீண்டும் எச்சரித்த புலி, 'இந்தா. உன் செலவுக்கு வைச்



சுக்கோ' என்று பணமும் கொடுத்தது.

அதை வாங்கிக் கொண்ட நரி, மூட்டையுடன் தன் வீட்டுக்கு வந்தது. மூட்டையில் இருந்த தின்பண்டங்களை, வேறு புதுக் கவரில் போட்டது. மீண்டும் அதை வேறு கடைகளில் கொடுத்து விற்பனை செய்ய வைத்தது. இதன் விளைவு, அந்தக் காட்டினுள் பேதி, ஜுரம்... என குட்டி விலங்குகளுக்கு நோய் பரவியது. மருத்துவமனைகளில் கூட்டம்!

''உணவில்தான் தவறு. கண்ட உணவு வகைகளை வாங்கிச் சாப்பிடுவதுதான் காரணம்'' என மருத்துவர்கள் சொன்னார்கள். எல்லாக் கடைகளிலும் வியாபாரம் பாதிப்படைந்தது. அதனால் வருந்திய நிலையில் இருந்த புலியைச் சந்தித்தது முயல். அப்போது, புலி சொன்னது :

''எனக்கு ஒரு சந்தேகம். நான் புதைக்கச் சொல்லி அனுப்பிய உணவுப் பண்டங்களை நரி விற்றிருப்பான் என நினைக்கிறேன். நீ சோதித்துப் பார்.''

அதைக் கேட்ட முயல், மறுநாள் நரியைச் சந்தித்தது.



''நாளை என் வீட்டில் ஒரு விருந்து. நீ அதற்கு உணவுப் பண்டங்களை அளிக்க முடியுமா?'' என்று கேட்டது. ''ஓ செய்கிறேன்'' என்ற நரி, மறுநாள் முன்போலவே, வேறு கடைகளில் வாங்கிய காலாவதி உணவுகளைக் கொண்டு வந்து கொடுத்தது.

அதைப் பெற்றுக் கொண்ட முயல், பரிசோதனைக்குக் கொடுத்தது. ''இந்த உணவுப் பண்டங்கள் கெட்டுப் போனவை'' என்று சான்றிதழ் தந்தார் பரிசோதனை செய்த கரடியார். பிறகென்ன? முயல் காட்டிய சான்றிதழைப் படித்த சிங்கராஜா, நரியை வரவழைத்து, தண்டனை வழங்கினார். என்ன தண்டனை தெரியுமா? ''நீ விற்பனைக்கு அனுப்பிய உணவு வகைகளை நீயே சாப்பிட வேண்டும்!'' நரி முதல் முறையாக, தன் தவறுக்காக வருந்தி அழ ஆரம்பித்தது.

- கே.கார்த்திக், உ. எண் 953,
காமராஜ் மேல்நிலைப் பள்ளி,
நம்பியூர்

பிரேசில் நாட்டில் உள்ள சின்ன மீன்பிடி நகரம். Laguna. இங்குள்ள மீனவர்கள் டால்ஃபின்களைப் பிடிப்பதற்குச் சிறிய மீன்களை வலையில் கட்டி வைத்தார்கள். அதனை உண்ண வந்த டால்ஃபின்கள் வலையில் மாட்டிக் கொண்டன.

சில வருடங்கள் கழித்து டால்ஃபின்கள் வலையில் சிக்குவது நின்றது! அதாவது வலையில் கட்டிய மீன்கள் கரையை நோக்கியே அசைந்தாடும். இதைக் கண்டுபிடித்த பின், டால்ஃபின்கள் வலை இருக்கும் பக்கமே தலை வைத்துப் படுப்பது இல்லை! ஏதேனும் ஒரு டால்ஃபின் இது போன்று பொய் மீன்களைக் கண்டால், உடனடியாக எல்லா டால்ஃபின்களுக்கும் சீட்டியடித்து தகவல் சொல்லிவிடுமாம். இது ஒரு அதிசயமான நிகழ்வுதான்.

வெளவால்கள் போன்றே எக்கோ (echo location) மூலம் அதாவது எதிரே இருக்கும் பொருள் மேல்பட்டு வரும் எதிரொலியைப் பயன்படுத்தி உணவை கண்டுகின்றன டால்ஃபின்கள். இவை தூங்கும்போது ஒரு கண்ணைத் திறந்து வைத்துதான் தூங்கும். அப்பொழுது வலது கண் திறந்து இருந்தால் இடது பக்க மூளை வேலை செய்யும். இடது கண் திறந்து இருந்தால் வலது பக்க மூளை வேலை செய்யும். தூங்கும்போது இவை மிக மெதுவாகவே நீந்தும்.

டால்ஃபின் தன் பற்களை, இரையைப் பிடிக்க மட்டுமே பயன்படுத்தும். உண்ணும் போது பற்களால் கடிக்காமல் அப்படியே விழுங்கிவிடும். டால்ஃபின்களில் சுமார் 40 வகையான இனங்கள் உள்ளன. பெரும்பாலானவை சுமார் 30 நிமிடங்கள் வரை தண்ணீருக்கடியில் மூச்சை அடக்கிக்கொள்




ளும் திறன் உடையவை. கூரான உடல் அமைப்பை கொண்டுள்ளதால், இவை வேகமாக நீந்தும். அதாவது மணிக்கு 41 கி.மீ. வேகத்தில் நீந்தும்.

இருபது ஆண்டுகள் வரை உயிர்வாழக் கூடியவை இவை. அமெரிக்க ராணுவத்தில், டால்ஃபின்களுக்கு கேமராக்கள் பொருத்தி, கண்காணிப்புக்கும் பயன்படுத்துகிறார்கள். அறிவுக் கூர்மை வாய்ந்த விலங்குகளில் இவையும் ஒன்று. இவை உலகெங்கும் காணப்படுகின்றன என்றாலும், ஆழம் குறைந்த கடல் பகுதிகளில் அதிகமாகக் காணலாம்.

தமிழில் ஓங்கில் என்றும் கடல் பன்றி என்றும் குறிப்பிடப்படுகின்றன டால்ஃபின்கள். இந்திய தேசிய நீர் விலங்கு என்று, இதனை கடந்த 2009, அக்டோபர் மாதத்தில் அறிவித்துள்ளது மத்திய அரசு. இவற்றில் ஒரு வகையான நன்னீர் வாழ் டால்ஃபின் இனம் அழியும் தருவாயில் உள்ளது என்கிறார்கள் உயிரியலாளர்கள்!

- எஸ்.டில்லிபாபு,
சி.எஸ்.எம்.ந.மே.
நி. பள்ளி
காஞ்சிபுரம்.




மன்னன்!



எம். லட்சுமண் தீபக். ஐந்தாம் வகுப்பு
நப்பின்னை மெட்ரிகுலேஷன் பள்ளி, சென்னை.



எம்.சிவரஞ்சனி.
உறுப்பினர் எண்:179
ஸ்ரீ மகாதேவி குருஜி
மெட்ரிகுலேஷன் பள்ளி.
வலங்கைமான்.



கே.ஜெ.ஷிஃபானா அஃப்ஸின்.
உறுப்பினர் எண்:913
ஆக்ஸ்போர்டு
மெட்ரிகுலேஷன்
பள்ளி.
கூத்தாநல்லூர்.

அட்டீஸ் கைவண்ணம்!



[illegible]
நான்காம் வகுப்பு.
[illegible]



பெ. மி. இன்னிசை வேந்தன்.
உறுப்பினர் எண்:969
அரசு நடுநிலைப் பள்ளி, புதுவை.

தெரியுமா?

ஒரே ஆட்டத்தில் 23 கோல்கள்!

* இவர் 1980ஆம் ஆண்டு மார்ச் 21ஆம் தேதி பிரேசிலின் போர்ட்டோ ஸ்லெக்ரே (Porto Slegre) யில் பிறந்தார்.

* இளம் வயதிலேயே கால்பந்து விளையாட்டால் கவரப்பட்டார். 13 வய தில் உள்ளூர் அணிக்கெதிரான ஆட்டத் தில் 23 கோல்கள் அடித்தார்.

* 1997ஆம் ஆண்டு எகிப்தில் நடைபெற்ற 17 வயதுக்குட்பட்டோருக் கான உலகக் கோப்பை போட்டியில் ஜொலித்ததன் மூலம் நட்சத்திர வீரராக அடையாளம் காணப்பட்டார்.

* 1998ஆம் ஆண்டு கிரிமியோ கிளப் பில் ஆடத்துவங்கிய இவர், 1999ஆம் ஆண்டு பிரேசில் தேசிய அணியில் இடம்பிடித்தார்.

* அவர் ப்ரீகிக் (free-kick) அடிப்பதில் வல்லவர். நடுகளத் தாக்குதல் ஆட்டக் காரராக மட்டுமின்றி, சிறந்த தடுப்பாட்டக் காரராகவும் திகழ்ந்தவர்.

* 2000ஆம் ஆண்டில் ஆஸ்திரேலி யாவின் சிட்னி நகரில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில், சிறப்பாக விளையாடியதற்காகத் தங்கப் பதக் கம் வென்றார்.

* 2002ஆம் ஆண்டு நடை பெற்ற உலகக் கோப்பை போட் டியில், இரு கோல்கள் அடித்து ஐந்தாவது முறையாக பிரேசில் வெல்வதற்குக் காரணமானார்.


* 2005ஆம் ஆண்டு ஃபிஃபா கூட்டமைப்பு கோப்பைக்கான போட்டி யில், கோப்பையை வென்ற பிரேசில் அணியின் கேப்டனாக அவர் இருந்தார்.

* இதுவரை பிரேசில் அணிக்காக 87 ஆட்டங்களில் விளையாடியுள்ள, இவர் 32 கோல்கள் அடித்துள்ளார்.

* 1999 ஆம் ஆண்டு ஃபிபா கூட் டமைப்பு கோப் பையின் அதிக கோல் கள் அடித்த வீரர் விருது, தங்கப்பந்து, 2009ஆம் ஆண்டின் தங்க ஷூ விருது உட்பட பல விருதுகளைப் பெற்றுள்ளார் இவர்.

இவர் யார்?

- வி.விஜய்,
பத்தாம் வகுப்பு,
ஸ்ரீராமகிருஷ்ண
மிஷன் வித்யாலயா
உயர்நிலைப்
பள்ளி,
கோயமுத்தூர்



விடை : ரொனால்டினோ

மஞ்சளாவது



கெட்டியாக பச்சையாக இருக்கும் வாழைக்காய் பழுத்ததும் இளகி, மஞ்சளாக மாறுவது ஏன்?

வாழைக்காய் பழமாக மாறும்போது, அதில் உள்ள மாவுச்சத்து குளுக்கோஸ் மற்றும் சாக்ரோஸ் ஆகியவை சர்க்கரை வடிவங்களாக மாறுகிறது. இதனால்தான், கசக்கும் வாழைக்காய் இனிக்கும் வாழைப்பழமாக மாறுகிறது. கெட்டியான காய் நாளடைவில் கொழகொழ வென்று மாறுவதற்கும், அதன் செல்களின் சுவர் சிதைவதுதான் காரணம். அப்படிப் பழுக்கும்போது, காய்களில் உள்ள நிறமிகள் நிறமாற்றத்தின் மூலம் காய் பழுத்து விட்டதை அறிவிக்கின்றன.

– எச்.அஜிரா, கீழக்கரை

தயிராவது எப்படி?

பாலைத் தயிராக்க, பாலில் சிறிது தயிர் அல்லது மோர் ஊற்றுவோம். சில மணி நேரங்களில் அந்தப் பால் தயிராக மாறி விடுகிறது. பால் எப்படித் தயிராக மாறுகிறது?

பாலில் 'கேஸீன்' எனப்படும் புரதச் சத்து அடங்கியுள்ளது. பாலுக்கு வெண்மை நிறம் கொடுப்பது இந்தப் பொருள்தான். மனிதனுக்குத் தேவையான, அவசியமான அமினோ அமிலங்கள் இந்தக் கேஸீனில் அடங்கியுள்ளன.

தயிரில் 'லாக்டிக்' அமில பாக்டிரியாக்கள் அடங்கி உள்ளன. பாலுடன்



ஏன்?



தயிரைச் சேர்க்கும் போது, தயிரில் அடங்கி உள்ள லாக்டிக் அமில பாக்டீரியாக்களுக்கும், பாலில் அடங்கி உள்ள கேஸீனுக்கும் இடையே வேதியியல் வினை நடக்கிறது. அப்போது, தயிரில், அடங்கியுள்ள லாக்டிக் அமில பாக்டீரியாக்கள், பாலில் அடங்கியுள்ள கேஸீனைத் தயிராகச் செய்கின்றன.

- பி.சர்வேஸ்வரன்,
உ. எண் 456,
மதுரை



சுருக்கம் எதனால்?

சிறிது நேரம் துணி துவைத்து விட்டு கையைப் பார்த்தால், விரல் நுனிகள் சுருங்கி இருக்கும். பிறகு சிறிது நேரத்தில் மீண்டும் பழைய நிலைக்கு வந்துவிடும். இதற்குக் காரணம் என்ன?

நம் விரல் நுனிகள் மற்றும் கால் பாதங்களில் உள்ள தோல் தடிமனானவை. இந்தத் தோலை 'ஸ்ராட்டம் கார்னியம்' என்று அழைப்பர். நாம் நீண்ட நேரம் கையை நீரில் அமிழ்த்தி வைத்திருக்கும் போது, இந்தத் தடிமனான தோல் அடுக்குகள் நீரை உறிஞ்சி விரிவடைகின்றன. அதற்கு மேலும் மேலும் விரிவடைய இடமில்லாமல் போகும் போது, கையில் சுருக்கங்கள் காணப்படுகின்றன. தோலில் உள்ள நீர் உலர்ந்ததும் மீண்டும் பழைய நிலைக்கு வந்து விடுகிறது.

- தைசீரா, கீழக்கரை


தொடரும்
வெற்றிகள்!


கோகுலம்
நவம்பர் 2010

ஒருமுறை கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணனைப் பார்க்க நண்பர் ஒருவர் வந்திருந்தார். வந்தவர் பேச்சுவாக்கில் கலைவாணரிடம், ''அண்ணனுக்கு என்ன வயசு?'' என்று கேட்டார்.

''உங்க அண்ணனுக்கா?'' என்றார் கலைவாணர்.

''இல்லை. உங்களுக்குத்தான்!''

''என்ன? என்னைப்போய் அண்ணன்னு சொல்றீங்க? 40 வயதாகி 7 வருஷம்தான் ஆச்சு.'' என்றார்.





மன்னிக்கும் முறை!

ஆப்ரஹாம் லிங்கனிடம் ''எனக்கு ஒருவன் சகிக்க முடியாத துன்பத்தை இழைத்து விட்டான். என்னால் அந்தத் துன்பத்தை மறக்க முடியவில்லை. என்ன செய்வது?'' எனக் கேட்டார் ஒரு நண்பர். ''எவ்வளவு கடுமையாகத் திட்டி எழுத முடியுமோ, அவ்வளவு கடுமையாய் அவனுக்கு ஒரு கடிதம் எழுது.'' என்று லிங்கன் சொன்னார்.

அவர் சொன்னதைப் போலவே, தம்மைத் துன்புறுத்தியவனுக்குக் காரசாரமாய் ஒரு கடிதம் எழுதி, லிங்கனிடம் எடுத்து வந்து ''ஐயா! நீங்கள் சொன்னபடி கடுமையாகத் திட்டி எழுதி வந்துள்ளேன். தபாலில் போட்டு விடவா?'' என்றார் நண்பர். ''எழுதிய வரை சரி. தபாலில் சேர்க்க வேண்டாம். அதைக் கிழித்து எறிந்து விடு. நடந்ததை மறந்துவிடு. மனதார மன்னித்துவிடு. உன் சுமை குறைந்துவிடும்'' என்றார் லிங்கன்.



- ஜி.எஸ். ஸ்ரீமதி,
உ. எண் 1382, கோபி

என்ன வயது?



''40 வயதாகி 7 மாசமாச்சுங்களா?''

''இல்லை. 40 வயசாகி 7 வருஷமாச்சு. ஆனால் 40 போதும். அதிக ஆசை எதுக்குன்னு அதோட நிறுத்திக்கிட்டேன்.''

கேள்வி கேட்டவர் சிரித்து முடியும்வரை காத்திருந்தார். பிறகு, ''47 வயசுன்னு சொன்னா கிழவன் மாதிரி தோணுது பாருங்க. அதனால்தான் அப்படிச் சொல்றேன்'' என்றார் கலைவாணர்.

- என்.ஜரினா பானு, திருப்பட்டினம்

பீரோவின் விலை!




உலகப் புகழ்பெற்ற ஓவியர் பிகாஸோ, மரப்பொருட்கள் விற்பனை செய்யும் கடைக்கு ஒரு முறை சென்றார். இவரைப் பார்த்ததும் கடைக்காரர் ஓடோடி வந்து வரவேற்றார்.

ஒரு பீரோ வேண்டும் என்றவர் பீரோ எப்படியெல்லாம் இருக்க வேண்டும் என்ற மாதிரியைச் சொன்னார். இவர் சொல்லும் அமைப்பில் கடையில் பீரோ இல்லை. இவர் சொல்வதும் கடைக்காரருக்கு விளங்க வில்லை.

உடனே அங்கிருந்த ஒரு காகிதத்தை எடுத்து, தாம் விரும்பிய பீரோ மாதிரியைக் கடகடவென வரைந்து ''இதுமாதிரிதான் வேணும். இதற்கு எவ்வளவு செலவாகும்?'' என்றார்.

''பணம் ஏதும் நீங்கள் கொடுக்க வேண்டாம். பீரோவை வரைந்து படம் போட்டிருக்கிறீர்களே. அந்தக் காகிதத்தில் 'பிகாஸோ' என்று உங்கள் பெயரைக் கையெழுத்திட்டுக் கொடுங்கள். அது போதும்!'' என்றார் கடைக்காரர்.

- என்.ஜரினா பானு, திருப்பட்டினம்



உங்கள் கை வண்ணம்!



எஸ். மோகன ரூபன்.
ஏழாம் வகுப்பு.
ஜே.சி. மேல்நிலைப்பள்ளி.
கோவை.







பா. கஜேந்திர குமார், பத்தாம் வகுப்பு.
அரசு மேல்நிலைப் பள்ளி, திண்டுக்கல்.




தரணி ஆன்டனி பிரபு.
எட்டாம் வகுப்பு.
மாண்ட்ஃபோர்டு பள்ளி.
திருச்சி.




எஸ். சதீஷ். ஏழாம் வகுப்பு.
ஸ்ரீ ரங்கநாதர்
மெட்ரிகுலேஷன் பள்ளி.
கோவை.



கே.எஸ். ப்ரீத்தனா. எட்டாம் வகுப்பு.
கிரீன் பார்க் மெட்ரிகுலேஷன் பள்ளி.
நாமக்கல்.



ம.இராஜகேசவன். ஒன்பதாம் வகுப்பு.
அரசு உயர்நிலைப்பள்ளி. கரூர்.



வண்ணம் தீட்டுங்கள்!



"2012ல் உலகம் அழியப் போவுதுன்னு சொல்றது தப்புடா..!"

"எப்படிடா?"

"நேத்து ஒரு பவுடர் டப்பா வாங்கினேன். அதுல எக்ஸ்பயரி தேதி 2013ன்னு போட்டிருக்குடா!"

- பா.சூர்யநாராயணன், பிரின்ஸ் மேல்நிலைப் பள்ளி, சென்னை



"உங்க வீட்டு நாய்க்கு ரொம்ப திமிரு."

"எதை வைத்துச் சொல்ற?"

"என் மனைவியைப் பார்த்தால் வாலாட்டுது. என்னைப் பார்த்தால் காலாட்டுதே!"

- மு.ஹ. முஹம்மது அபூபக்கர், எல்.கே. மேல்நிலைப் பள்ளி, காயல்பட்டினம்



"இதயம் மணிக்கு எத்தனை முறை துடிக்கும்னு சரியாச் சொல்லு பார்க்கலாம்?"

"மணிக்கு மட்டுமல்ல சார், எல்லோருக்குமே நிமிடத்துக்கு 72 முறைதான் துடிக்கும்."

- ஜி.எஸ்.சபரி, கோபிசெட்டிபாளையம்

வகுப்பிலே டாப்!




"வகுப்பிலேயே என் மகன்தான் டாப்!"

"அப்படியா!"

"அஷோக்னு 'அ'விலே பெயர் தொடங்குவதால், வருகைப் பதிவேட்டிலே அவன்தான் முதலாவது..!"

- பா.பிரணவப்ரியா, ஒன்பதாம் வகுப்பு, பிரின்ஸ் மேல்நிலைப் பள்ளி, சென்னை



வெள்ளை

I. 1. பத்தாம் வகுப்புத் தேர்வை 50,000 பேர் எழுதினார்கள். அவர்களில் 3000 பேர் மட்டுமே தேர்ச்சி பெற்றார்கள். அவர்களின் தேர்வு எண்ணை செய்தித் தாளில் வெளியிட மூன்று பக்கங்கள் தேவைப்பட்டன. அப்படியானால் 50,000 பேரும் தேர்ச்சி பெற்றால், எத்தனை பக்கங்கள் தேவை?

2. 'பதினொன்றுடன் இரண்டைக் கூட்டினால் ஒன்று வரும்' என்றான் நண்பன். எப்படி என்று கேட்டேன். அவன் சொன்னது சரிதான். நீங்கள் கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்.

3. நாற்பதை எத்தனை முறை ஐந்தால் கழிக்க முடியும்?

4. ஒரு கூடையில் ஆறு ஆப்பிள்கள் இருந்தன. அவற்றை ஆளுக்கு ஒன்று என ஆறு பேருக்குக் கொடுத்தாயிற்று. ஆனால், ஒரு ஆப்பிள் கூடையில் இருந்தது. எப்படி?

- மா.மதிவாணன், எட்டாம் வகுப்பு, ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, திருவந்தவார்

II. தமிழ் இலக்கியங்கள் பற்றித் தெரியுமா உங்களுக்கு எங்கே, கீழ்காணும் குறிப்புகளைக் கொண்டு, விடைகளைக் கண்டுபிடியுங்கள்.

1. காலில் அணியும் ஆபரணம்! காப்பியப் பெயரில் காரம் தெரியும். அது என்ன?


2. காஃபி, டீயில் பயன்படுத்த முடியாத பால்! - அது என்ன?

3. மணிகளைக் கோத்துச் செய்த மேகலை எது?

4. நல்ல நூல்தான்; ஆனால் பூத்தொடுக்க உதவாது. அது என்ன?

5. இது வளையா? கல் பதித்துத் தா என்றாள் அவள். அது என்ன?

- எம்.ஹெச். முகம்மது அபுபக்கர், பதினொராம் வகுப்பு, எல்.கே. மே.நி. பள்ளி, காயல்பட்டினம்.



2. ஐரோப்பாவின் வெள்ளை நகரம் என்று அழைக்கப்படுவது ....

3. உலகிலேயே உயர்மான கட்டடமாக விளங்குவது கோலாலம்பூரில் உள்ள ....

4. ஏசு கிறிஸ்து பிறந்த இடம் ... .

5. உலகில் முற்றிலும் ஒழிக்கப்பட்ட நோய் ....

6. இந்தியாவின் 'சிலிக்கான் வேலி' என்று அழைக்கப்படும் நகரம் ....

- டி.தாரணி, உ. எண் 785, நீடாமங்கலம்

III. கண்டுபிடியுங்கள்

1. செயற்கைப் பட்டுக்கு இன்னொரு பெயர்?

2. இதை 'சிரிக்கும் வாயு' என்பார்கள்.

3. 'தங்க இழை' என்று சொல்லப்படுவது?

4. கேள்விக்குறியைப் பயன்படுத்திய முதல் மொழி எது?

- கி.பாலாஜி, ஆறாம் வகுப்பு, ராஜ் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, மயிலாடுதுறை.

நகரம்

IV. கீழே கேட்கப்பட்டிருக்கும் 7 கேள்விகளுக்கும் பதில்கள் ஐந்து எழுத்துக்களில் அமைந்திருக்கும். பதில்களின் முதல் எழுத்து பெ. எங்கே விடைகளைக் காணுங்கள் பார்க்கலாம்.

1.நின்று கொண்டே முட்டையை அடைகாக்கும் பறவை....................



விடைகள் **I.**1. ஒரே ஒரு வரி போதும். 'தேர்வு எழுதிய அனைவருமே தேர்ச்சி அடைந்தவர்' என்று வெளியிட்டு விடலாம். 2. பதினொரு மணியுடன் இரண்டு மணி சேர்த்தால், நேரம் மணி ஒன்று. சரிதானே? 3.ஒரு முறைதான். அதன்பிறகு, அது முப்பத்தைந்து ஆகிவிடும் 4. ரொம்ப ஸிம்பிள். ஒருவர் கூடையோடு எடுத்துக் கொண்டார். **II.**1. சிலப்பதிகாரம், 2.முப்பால் (திருக்குறள்) 3.மணிமேகலை 4.நன்னூல், 5.வளையாபதி **III.**1.ரேயான், 2.நைட்ரஸ் ஆக்ஸைடு, 3.சணல், 4.லத்தீன் **IV.** 1.பெங்குவின்,2. பெல்கிரேட், 3.பெட்ரோனாஸ், 4.பெத்லஹேம், 5.பெரியம்மை 6.பெங்களூரு

டீசலுக்கு மாற்று!



★ புன்னை மலர்

Calophyllum inophyllum என்ற அறிவியல் பெயரைக் கொண்டது புன்னை மரம். அதன் முதற்பகுதியான Calophyllum என்பது கிரேக்கச் சொல்லில் இருந்து உருவானது. அழகான இலை என் பது அதன் பொருள்! பெயருக்கு ஏற்ப இதன் இலைகள் பெரியதா கவும், பளபளப்பாகவும் இருக்கும். வெண்ணிற மலரும், அதில் மஞ்சள் நிற மகரந்தமும் அமைந் திருக்கும்.

இந்தியா, மியான்மர், மலேசியா, இலங்கை, ஆஸ்தி ரேலியா என்று உலகின் பல பகுதிகளில் இது காணப்படுகிறது. இதன் எண்ணெயை டீசலுக்கு மாற்றாகப் பயன்படுத்த முடியுமா என்று ஆராய்ச்சிகள் நடக்கின்றன.

சிக்கரி

தனிக் காஃபியைவிட, பெரும்பாலோர் விரும்பி அருந்துவது சிக்கரி கலந்த காஃபி. சிக்கரிப் பொடியைத் தனியாக காஃபிக்குப் பதிலாகப் பயன்படுத்துபவர்களும் உள்ளனர். சிக்கரித் தாவரத்தின் தாயகம் ஐரோப்பா. இதன் இலைகளைக் கீரைக் கிச்சடி செய்வதற்கும் பயன்படுத்துகிறார்கள். இதன் நீண்ட பருமனான வேர்களை உலர்த்தி, வறுத்து, பொடி செய்து தயாரிக்கப்படுவதுதான் சிக்கரி. சிக்கரிச் செடி, ஒன்று முதல் இரண்டு மீட்டர் உயரம் வரை வளரும். இதன் மலர் நான்கு செ.மீ. குறுக்களவு உடையது. இது ஒற்றையாகவோ அல்லது கொத்தாகவோ செடியின் கிளைகளில் காணப்படும். நீல வண்ணத்தில் இருக்கும். இதன் தாவரவியல் பெயர் சிக்கோரியம் இண்டிபஸ் (cichorium indibus).



சிக்கரி மலர்



அகாந்தஸ் மலர்

அகாந்தஸ்

முள் வகைச் செடி. புதர்ச் செடி வகைத் தொகுதியைச் சேர்ந்தது அகாந்தஸ் (Acanthus) எனும் தாவரம். இந்தத் தாவரத்தின் தாயகம் மத்தியத் தரைக் கடல் பகுதி, ஆப்பிரிக்கா மற்றும் ஆசியப் பகுதிகள். 'அகாந்த' என்ற சொல்லுக்கு, கிரேக்க மொழியில் 'முள் நிறைந்த' என்று பொருள். இது 90 செ.மீ. முதல் 120 செ.மீ. உயரம் வரை வளரும். இதன் மலர்கள் கொத்தாக, கதிர்க்குலையாகக் காட்சியளிக்கும். வெள்ளை நிறம் அல்லது இளஞ்சிவப்பு நிறத்திலிருந்து கருஞ்சிவப்பு நிறம் வரை பல நிறங்களில் காணப்படும். இந்தச் செடியின் இலைகள் மிகப் பெரியவை. ஏறக்குறைய 60 செ.மீ. நீளமும் 30 செ.மீ. அகலமும் கொண்டவை. முட்கள் நிறைந்ததாகவும் வெட்டுத் தடம் உள்ளதாகவும் இருக்கும்.

இதன் இலைகளின் அமைப்பு, அவற்றில் அமைந்துள்ள நேர்த்தியான கோடுகள் முதலியன பண்டை கிரேக்க, ரோம், கட்டடக் கலைஞர்களைக் கவர்ந்தன. எனவேதான் அவர்கள் கட்டிய கட்டடங்களிலும், தூண்களிலும் இந்த இலையை அழகிற்காக உருவமைத்துள்ளனர்.

- எஸ்.டில்லி பாபு, காஞ்சிபுரம்.



கொடுக்கப்பட்டுள்ள
எண்களை
இணைத்து
ஒளிந்திருப்பது
என்ன என்று
கண்டுபிடியுங்கள்

புள்ளிகளை இணையுங்கள்

கவலை தரும் சேதி!

உலகளாவிய நிலையில் அழிவின் விளிம்பில் இருக்கும் உயிரினங்களைப் பற்றி எச்சரிக்கிறது IUCN (International Union for Conservation of Nature and Natural Resources) அமைப்பு. அப்படி, அவை எச்சரித்துள்ள உயிரினங்களில் ஒன்று, மேற்கு ஆப்பிரிக்க கறுப்பு ரைனோ.

காண்டாமிருகம் என்று சொன்னால், நமக்கு அஸ்ஸாமில் உள்ள காஸிரங்கா தேசியப்பூங்கா நினைவுக்கு வரும். இந்த காண்டாமிருகங்களில் ஒரு வகை, கறுப்பு காண்டாமிருகம். இதை Hook Lipped Rhinoceros என்று சொல்வார்கள். இதன் அறிவியல் பெயர் Diceros Bicornis. ஆப்பிரிக்க நாடுகளான கென்யா, டான்சானியா, காமரூன், நமீபியா, அங்கோலா உள்ளிட்ட பகுதிகளே இதன் தாயகம். இவற்றில் ஒரு வகை, மேற்கு ஆப்பிரிக்க கறுப்பு ரைனோ (Diceros Bicornis Longipes). இவை ஒரு காலத்தில் மிகப் பெருமளவில் இருந்தன என்றாலும், இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பெருமளவுக்கு வேட்டையாடப்பட்டன. அதன் விளைவு, 1980களில் சில நூறுகள் எண்ணுமளவுக்கு இவற்றின் எண்ணிக்கை குறைந்தது. இவற்றைக் காக்க பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட போதிலும், அவை உரிய பலனளிக்கவில்லை. 2000 ஆண்டு கணக்கெடுப்பின்படி, பத்து என்ற அளவில்தான் இவை காணப்பட்டன. சமீபத்திய கணக்கெடுப்பில், ஒரு காண்டாமிருகம்கூட காணப்படவில்லை என்கிறார்கள். அதனால், அழிந்துவிட்ட அல்லது அழிவின் விளிம்பிலுள்ள என்கிற எச்சரிக்கையோடு, இந்த காண்டாமிருகத்தைக் குறிப்பிடுகிறது IUCN.

- யாழினி அன்புமணி,
ஈரோடு



✱ தென் ஆப்பிரிக்காவில் ஜிம்பாப்வேக்கும் ஜாம்பியாவுக்கும் இடையே அமைந்துள்ளது விக்டோரியா அருவி. இது உலகின் பெரிய அருவிகளுள் ஒன்று. இதைக் கண்டுபிடித்தவர் ஸ்காட்லாந்தைச் சேர்ந்த டேவிட் லிவிங்ஸ்டோன் (David Livingstone).

✱ ஆப்பிரிக்காவுக்கும் ஆசியாவுக்கும் இடையில், இந்தியப் பெருங்கடலின் நுழைவாயிலில் அமைந்துள்ளது செங்கடல். இதில் 1,200 வகையான மீன்கள் காணப்படுகின்றன. அவற்றில் பத்து சதவிகிதத்தை வேறெங்கும் காண முடியாது.

✱ இந்தோனேஷியாவில் உள்ளது கெலிமூட் எரிமலை. இந்தப் பகுதியில் அமைந்துள்ள மூன்று ஏரிகளின் நீரும், வெவ்வேறு நிறத்தில் காணப்படுன்றன.

✱ பாலைவனக் கப்பல் என்று ஒட்டகத்தைச் சொல்கிறோம். camel என்ற அதன் ஆங்கிலப் பெயர், அரபு மொழிச் சொல்லில் இருந்து உருவானது.

✱ வேகமாக ஓடும் திறன்கொண்டது நெருப்புக்கோழி. முட்டைகளை அடைகாக்கும் சமயத்தில், ஆண் நெருப்புக் கோழி எழுப்பும் ஒலி, சிங்கத்தின் கர்ஜனை போல் இருக்கும் என்கிறார்கள் அறிவியலாளர்கள்.

கர்ஜிக்கும்





✱ இத்தாலி நாட்டின் புகழ்பெற்ற நகரம் 'நேப்பிள்ஸ்'. இதை 'இத்தாலியின் கல்கத்தா' என்று சொல்கிறார்கள்.

✱ அதிகமான மலை மற்றும் காட்டுப் பகுதிகளைக் கொண்ட இந்திய மாநிலம் அஸ்ஸாம். இதன் பழங்காலப் பெயர் காமரூபம்.

- ஏ.சுந்தரராஜன்,
உ. எண் 1158,
திருக்கழுக்குன்றம்

✸ மேற்கு ஆஸ்திரேலியாவில் உள்ளது ஹில்லியர் ஏரி (Lake Hillier). இந்த ஏரியின் நீர் இளஞ்சிவப்பு (pink rose) நிறமாகக் காணப்படும்.

✸ வட அமெரிக்காவில் உள்ளது Yellowstone National Park. இங்கே உலகின் இயற்கை யாக அமைந்த



கோழி!

மிகப் பெரிய வெந்நீர் ஊற்று உள்ளது. இந்த ஊற்றுக்கு ஓல்டு ஃபெய்த்ஃபுல் (Old Faithful) என்று பெயர்.


- டி.ஆர்.ரெங்கதேவா,
உ. எண் 577,
திருநெல்வேலி


✸ ஐக்கிய அரபுக் குடியரசு (United Arab Emirates) என்று சொல்லப்படும் நாடுகள். அபு தாபி, துபாய், ஃபுஜைரியா, உம் அல் மைகா ஆகியவை.

✸ அர்ஜென்டினாவுக்கு 'கடல் கடந்த ஐரோப்பா' என்றும் பெயருண்டு. ஐரோப்பிய மக்கள் மிகுதியாகக் குடியேறியதால் உண்டான பெயர் இது.


✸ பெனிலெக்ஸ் (Benelux) என்ற பெயரால் குறிப்பிடப்படும் நாடுகள், பெல்ஜியம், நெதர்லாந்து, லக்ஸம்பர்க் ஆகியன.

- எம்.எஸ்.ஷண்முகப்ரியா,
உ. எண் 622, சேலம்





வித்தியாசங்களைக் கண்டுபிடி!



விடைகள்: 1.தூண்டில் முடிச்சு 2.மீன் செதில் 3.சிறுவனின் தொப்பி 4. கூடையில் கயிறு 5. மீன் குஞ்சு.

கோகுலம் சிறுவர் சங்கம்

பட்டியல்

இந்த மாதமும் பட்டியல் தொடர்கிறது. இவர்களின் புகைப்படங்கள் இரண்டாவது, மூன்றாவது அட்டையில்!

1826. எஸ்.சமந்தா ஜெனிபர், ஆறாம் வகுப்பு, பி.கே. அரசு பெண்கள் உயர்நிலைப்பள்ளி,சென்னை

1827. எஸ்.சேம் கில்பட்ராஜ், எட்டாம் வகுப்பு, சேரோன் மெட்ரிகுலேஷன் பள்ளி, சென்னை

1828. த.சுந்தர், எட்டாம் வகுப்பு, நிர்மலா மெட்ரிகுலேஷன் பள்ளி, சிதம்பரம்

1829. ஏ.சக்திவேல், ரோஸ்மேரி மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளி, பாளையங்கோட்டை

1830. சி.நவநீதகிருஷ்ணன், பத்தாம் வகுப்பு, காமராஜ் மேனிலைப் பள்ளி, ஈரோடு

1831. எஸ்.சூரியநாதன், ஏழாம் வகுப்பு, ஸ்ரீ விவேகானந்த வித்யாவனம் உயர் நிலைப் பள்ளி, மதுரை

1832. எஸ்.சிஸ்வந்த்குமார், ஐந்தாம் வகுப்பு, பத்மா சேஷாத்ரி பாலபவன், சென்னை

1833. எஸ்.சினேகா, ஐந்தாம் வகுப்பு, பத்மா சேஷாத்ரி பாலபவன், சென்னை

1834. தி.வரதராஜன், பதினொராம் வகுப்பு, வேளாங்கண்ணி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, ஓசூர்

1835. மு.யோகேஷ்குமார், மூன்றாம் வகுப்பு, லயன்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி, விருதுநகர்

1836. எஸ்.எச். பாலசபரிஷ், ஒன்றாம் வகுப்பு, லிட்டில் பிளவர் மேல் நிலைப் பள்ளி, ஈரோடு

1837. எம்.வாணிசரஸ்வதி, ஒன்பதாம் வகுப்பு, அரசு உயர்நிலைப் பள்ளி, சிவகங்கை

1838. ஜி.அஜய்குமார், நான்காம் வகுப்பு, சாரதா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, செஞ்சி

1839. ராஜா தாரணி, ஆறாம் வகுப்பு, விவேகானந்தா மெட்ரிக் பள்ளி, சீர்காழி

1840. ரா.தீபன், மூன்றாம் வகுப்பு, விவே கானந்தா மெட்ரிக் பள்ளி, சீர்காழி

1841. வீ.லட்சுமிபதி, எட்டாம் வகுப்பு, பு.தி.வ.ச. உயர் நிலைப் பள்ளி, திருக்கழுக் குன்றம்

1842. தே.பிரகாஷ், ஐந்தாம் வகுப்பு, விவேகானந்தா உயர்நிலைப் பள்ளி, திருப்பூர்



1843. தெ.சசி ஆனந்த், ஒன்பதாம் வகுப்பு, ஸ்ரீகங்கா மேல்நிலைப் பள்ளி, ஈங்கூர்
1844. டி.ஜெகதீஸ், ஒன்பதாம் வகுப்பு, அரசு உயர்நிலைப் பள்ளி, மூலச்சல்
1845. எம்.ஏ.அபினேஷ், ஐந்தாம் வகுப்பு, புனித மரியன்னை நடுநிலைப் பள்ளி, கன்னியாகுமரி
1846. பி.கே.ஜெய்ஸ்ரீநிவாஸ், மூன்றாம் வகுப்பு, வேலம்மாள் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, சென்னை
1847. மு.கவியரசி, எட்டாம் வகுப்பு, மாரியம்மன் பெண்கள் மேல் நிலைப் பள்ளி, பொள்ளாச்சி
1848. ப.தனலட்சுமி, ஆறாம் வகுப்பு, மாரியம்மாள் பெண்கள் மேல் நிலைப் பள்ளி, பொள்ளாச்சி
1849. எஸ்.பவதாரிணி, இரண்டாம் வகுப்பு, ஸ்ரீரேணுகா வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, தேனி
1850. எஸ்.ப்ரதீப்குமார், ஐந்தாம் வகுப்பு, சிந்தி வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, கோயம்புத்தூர்
1851. ஏ.மீனாட்சி, ஒன்பதாம் வகுப்பு, மாரியம்மாள் பெண்கள் மேல் நிலைப் பள்ளி, பொள்ளாச்சி



1852. இ.சா.பிரித்தீபன், ஆறாம் வகுப்பு, ஆல்வின் மேல்நிலைப் பள்ளி, தஞ்சை
1853. சு.அசோக்குமார், எட்டாம் வகுப்பு, ஸ்ரீகங்கா மேல்நிலைப் பள்ளி, பெருந்துறை
1854. சி.சந்தோஷ்குமார், ஐந்தாம் வகுப்பு, பி.கே.டி. மெட்ரிக் மேல் நிலைப் பள்ளி, பொள்ளாச்சி
1855. வை.நிர்மல்குமார், எட்டாம் வகுப்பு, சேரன் மெட்ரிக் மேல் நிலைப் பள்ளி, கரூர்
1856. எம்.ஏ.நவீதா, ஆறாம் வகுப்பு, பாய்லர் பிளாண்ட் பெண்கள் மேல்நிலைப் பள்ளி, திருச்சி
1857. து.யோகேஷ், எட்டாம் வகுப்பு, விவேகம் மேல்நிலைப் பள்ளி, திண்டுக்கல்
1858. ச.சரண்யா, ஒன்பதாம் வகுப்பு, பாரதி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, கோவை
1859. தி.கங்காதேவி, மூன்றாம் வகுப்பு, சி.இ.நா. பெண்கள் நடுநிலைப் பள்ளி, சிவகாசி
1860. ஜே.மோகனகிருஷ்ணன், மூன்றாம் வகுப்பு, திருதங்கல் நாடார் வித்யாலயா, சென்னை
1861. பி.ராஜேஸ்வரி, நான்காம் வகுப்பு, லிட்டில் பிளவர் மெட்ரிக் மேல் நிலைப் பள்ளி, திருநெல்வேலி
1862. கே.கல்பனா, ஆறாம் வகுப்பு, மாரியம்மாள் பெண்கள் மேல்நிலைப் பள்ளி, பொள்ளாச்சி
1863. அக்ஷரா சீ.ஜெ. ஏழாம் வகுப்பு, பாரதி மெட்ரிக் பள்ளி, கோவை
1864. டி.மைதிலி, எல்.கே.ஜி, பாரதி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, கோவை

கோகுலம் சிறுவர் சங்கம் - கூப்பன்

என் பெயர் :..

வயது :..

பெற்றோர் பெயர் :..

வகுப்பு, பள்ளி :..

....

வீட்டு முகவரி :..

....

....

நான் கோகுலம் சிறுவர் சங்கத்தில் உறுப்பினராகச் சேர விரும்புகிறேன்.

உங்கள் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்கிறேன்.

(கையொப்பம்)

இதுவரை கோகுலம் சிறுவர் சங்கத்துக்கு கூப்பன் அனுப்பாதவர்கள் உடனே அனுப்புங்கள். உங்கள் நண்பர்களுக்கும் விஷயத்தைச் சொல்லி, அவர்களையும் உறுப்பினராக்குங்கள்!

1865. ஆர்.கணேஷ், பதினொராம் வகுப்பு, அரசினர் மேல்நிலைப் பள்ளி, சேலம்
1866. ஆ.ராகினி, எட்டாம் வகுப்பு, லதாங்கி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, பொள்ளாச்சி
1867. த.மதுமிதா, ஏழாம் வகுப்பு, மாரியம்மாள் பெண்கள் மேல்நிலைப் பள்ளி, பொள்ளாச்சி
1868. ச.விக்னேஷ், எட்டாம் வகுப்பு, ராமகிருஷ்ணா மிஷன் வித்யாலயம், கோவை
1869. பி.ஆர்.பாலாஜி, பதினொராம் வகுப்பு, பிளேக் மேல்நிலைப் பள்ளி, தஞ்சாவூர்
1870. பா.சூரியநாராயணன், நான்காம் வகுப்பு, பிரின்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி, சென்னை
1871. ம.பிரசாந்த், பத்தாம் வகுப்பு, விவேகானந்த குருகுலம் பள்ளி, திருப்பூர்
1872. கே.வி.ஆனந்த், ஒன்பதாம் வகுப்பு, அரசு மேல்நிலைப் பள்ளி, கன்னியாகுமரி
1873. இரா.நந்தகுமார், ஆறாம் வகுப்பு, அரசர் மேல்நிலைப் பள்ளி, தஞ்சாவூர்
1874. சு.மோகனகுமார், ஒன்பதாம் வகுப்பு, விவேகானந்த குருகுலம் உயர்நிலைப் பள்ளி, திருப்பூர்
1875. கே.எஸ்.துளசி வினோதினி, ஏழாம் வகுப்பு, பி.எம்.சி. மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, தூத்துக்குடி

முதிய வழிப்போக்கர்

நடந்து களைத்துப் போனார் முதியவரான இவான். இருள் சூழ்ந்துவிட்டது. அருகே தென்பட பெரிய வீடு ஒன்றில் தங்க இடம் கேட்டார். அந்த வீட்டுக்காரப் பெண் கல்யா, ''நாங்க என்ன தர்மசத்திரமா நடந்துறோம்? போ... போ...'' என விரட்டியடித்தாள். அடுத்து ஒரு குடிசையின் கதவைத் தட்டினார் இவான்.

அந்த வீட்டுக்காரி மாரியா. அவளுக்கு மூன்று குழந்தைகள். கதவைத் திறந்து ''உள்ள வாங்க... என்ன வேணும்?'' என்றாள் மாரியா.

''மகளே! நான் நகரத்துக்குப் போறேன். இருட்டிடுச்சு. ராத்திரி மட்டும் தங்க இடம் தருவியா?'' என்றார் இவான். பேச்சிலேயே அந்த குடும்பத்தின் நிலைமை புரிந்துவிட்டது இவானுக்கு. கணவனை இழந்த மாரியா துணி தைத்துக் கொடுத்துப் பிழைக்கிறாள் என்பதை அறிந்தார். அவரை அமர்த்திய மாரியா, இருந்த உணவை எல்லாருக்கும் பகிர்ந்து அளித்தாள். அவளுக்கு உணவு எதுவும் இல்லை. பட்டினி தான்.

மறுநாள், விடியும் முன்பே இவான் கிளம்பினார். புறப்படும் போது ''மகளே, இன்னிக்கு காலையில் நீ முதன் முதல்ல எந்த வேலையைத் தொடங்குகிறாயோ அதை நாள் முழுக்கச் செய்து கிட்டே இருப்பே''ன்னு ஆசீர்வாதம் செய்து விட்டுப் போனார்.

மாரியா யோசித்தாள். வீட்டில் சமையலுக்கு எதுவுமே இல்லை. பழம் பறித்து வரலாம் எனக் கிளம்பினாள். மரத்திலிருந்து ஆப்பிள் பழம் ஒன்றைப் பறித்தாள். அடுத்தடுத்து பறித்துக் கொண்டே இருந்தாள். மரத்திலும் பழம் இருந்து கொண்டே இருந்தது. மதியம் ஆச்சு; மாலை வந்தது. ஆனால், பழம் பறிப்பதை அவளால் நிறுத்த முடியவில்லை. வீடு முழுக்க ஆப்பிள் பழம். இரவு வந்ததும்தான், அவளால் பறிப்பதை நிறுத்த முடிந்தது.


அந்தப் பழங்களில் கொஞ்சத்தைக்

ஜானகி மணாளன்



கொண்டு போய், நகரத்தில் விற்றுவிட்டு, வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்கி வந்தாள். மறுநாள் விற்றபோது நிறையப் பணம் கிடைத்தது. மூணு தையல் எந்திரம் வாங்கிப் போட்டு, ஒரு கடை திறந்தாள். இன்னமும் பழம் இருந் தது. அதையும் விற்றுப் பணக்காரி ஆனாள். இதைக் கேள்விப்பட்ட கல்யா, 'நல்ல வாய்ப்பு போச்சே' என வருந்தி னாள். அந்த முதியவர் மறுபடியும் வரமாட்டாரா என்று ஏங்கினாள்.

சில மாதங்கள் கடந்தன. நகரத் திலிருந்து இவான் திரும்பினார். இப்ப கல்யாவின் வீட்டுக் கதவைத் தட்டினார். முதியவரைப் பார்த்த கல்யா "உங்க ளைத்தான் எதிர்பார்த்துக் காத்திருக்கி றேன்" என்றாள். உள்ளே அழைத்துப்



போய், தங்கத் தாம்பளத்தில் வகை வகையான உணவு வைத்து விருந்து கொடுத்தாள். கட்டிலில் மெத்தை விரித்துத் தூங்கச் சொன்னாள்.

மறுநாள், பொழுது விடிந்தது. இவான் கிளம்பத் தயாரானார். பின்னாலேயே போன கல்யா "பெரிய விருந்தெல்லாம் கொடுத்தேன். சொகுசாகத் தூங்க வைத் தேன். எனக்கு ஆசீர்வாதம் கிடையாதா?" என்றாள்.

இவான் சிரித்தபடியே "மறந்தே போச்சு! மகளே, இன்னிக்கு காலையில் நீ முதன் முதல்ல எதைச் செய்யறியோ, அதை நாள் முழுக்க செய்துகிட்டே இருப்பே..." என்றார்.

கல்யா விரும்பியதும் இதைத்தானே! அதனால் 'பொழுது விடிந்ததும் முதல் வேலையா நம் தங்க நகைகள எண்ணு வோம். எண்ண எண்ண, புதுப்புது தங்க நகைகள் கிடைச்சுக்கிட்டே இருக் கும். அத்தனையையும் விற்று பெரிய பணக்காரி ஆகிடலாம்' என்று முடிவு செய்தாள். அதன்படியே நகைகளை எண்ணத் தொடங்கினாள்.

ஆனால், அவளுடைய தங்க நகைக ளையே திரும்பத் திரும்ப எண்ணிக் கொண்டு இருந்தாளே தவிர, புது தங்க நகை எதுவும் கிடைக்கவில்லை.

அதை உணர்ந்ததும், எண்ணுவதை நிறுத்த நினைத்தாள். ஆனாலும் முடிய வில்லை. நாள் முழுக்க எண்ணியதுதான் மிச்சம். 'பேராசைப்பட்டதன் விளைவு தான் இந்த ஏமாற்றம்' என்று புரிந்தது அவளுக்கு!

நரா (Nara) என்பது வரலாற்றுப் புகழ்மிக்க ஜப்பானிய நகரம். சீனாவில் உள்ள சாங்கன் நகர் (Chang'an) பாணியில் கி.பி. 710-ம் ஆண்டு இது நிர்மாணிக்கப்பட்டது. இன்றைய கியோட்டாவிற்கு அருகில் அமைக்கப்பட்ட முதல் நகர்; முதல் தலைநகரமும்கூட! இங்குதான் முழுவதும் மரத்தினாலேயே கட்டப்பட்ட உலகப் புகழ் பெற்ற கோஃபுகுஜி (kofukuji) விஹாரம் உள்ளது. இதுவரை சீனப்பாணியைப் பின்பற்றி வந்த ஜப்பான், தனக்கென ஒரு தனிப் பாணியை அமைத்துக் கொண்டு புதிய கலாசாரத்தைத் துவக்கியதும் இந்த நகரிலிருந்து தான்.

Norimura என்பவரால் கட்டப்பட்டது.

அதையடுத்து பல முறை இது புதுப்பிக்கப்பட்டு விரிவாக்கம் செய்யப்பட்டது. இதற்கு 'ஹிமேஜி காப்பரண்' (Himeji castle) என்று பெயர்.

கண்ணைப் பறிக்கும் வெண்மையான சுவர்களுடனும், உயரமான மேல் நோக்கிய கூரைகளுடனும் அமைந்துள்ள அழகான காப்பரண் இது.

ஆற்றங்கரையருகே நிற்கும் வெள்ளை நாரை போல் இது அமைந்துள்ளதால், இதை 'வெள்ளை நாரை' என்று குறிப்பிடுவதுண்டு. தீ விபத்து ஏற்படாமலிருக்கத் தாயத்து போல் கூரையின் உச்சியில் மிகப் பெரிய மீன் உருவம் வைக்கப்பட்டுள்ளது.

வெள்ளை நாரை!

இந்த நகரப் பாதுகாப்பை முன்னிட்டு இங்கு ஒரு காவல் கோட்டை கட்டப்பட்டது. ஐரோப்பாவிலும் மற்ற நாடுகளிலும் காவல் கோட்டைகள் மிக வலிமையான சுற்றுச் சுவர்களுடன் அமைக்கப்படும். ஆனால், இந்தக் காவல் கோட்டையோ மேல் நோக்கிய கூரையுடன் மிகுந்த கலை நுணுக்கத்துடன் கட்டப்பட்டுள்ளது. இது 1333-ம் ஆண்டு Akamatsu



எஸ்.தணிகைவேல் பெரிய காஞ்சிபுரம்

இந்தக் கோட்டையைக் கட்ட ஏறக் குறைய 400 டன் மரமும், மொத்தம் 3000 டன் எடை கொண்ட 75000 ஓடுக ளும், பெரிய கற்களும் பயன்படுத்தப் பட்டுள்ளன.

கோட்டையைச் சுற்றி ஒன்றன் பின் ஒன்றாக மூன்று அகழி களும் சுவரில் ஆங் காங்கே காவல் கோபு ரங்களும் அமைக் கப்பட்டுள்ளன. அம்புகள், வேல்கள் போன்றவற்றை வீச சுவர்களில் கண்ணறைகளும் அமைக்கப் பட்டுள்ளன.

1945ல் நடைபெற்ற இரண்டாம் உலகப் போரின் போதும், 1995ல் நடை பெற்ற நிலநடுக்கத்தின்போதும், அடுத் தடுத்து புயல்களாலும், இதைச் சுற்றி யுள்ள பகுதிகள் பெரும் பாதிப் படைந்து உருக்குலைந்து போயின. ஆனால், பல நூறு ஆண்டு களுக்கும் மேலாக ஜப்பானியரின் மன உறுதியை நினைவு படுத்துவது போலவே நிலைத்திருக்கிறது இந்த வெள்ளை நாரை!





நிழல் கொடுப்பவன்!


விமானப் போக்குவரத்தில் ராடார் என்னும் கருவி மிக மிக முக்கிய இடத்தைப் பெற்றுள்ள சாதனம். வர்த்தகம் மற்றும் இராணுவ விமானப் போக்குவரத்துத் துறைகளில் ராடார் கையாளப்பட்டு வருகிறது. விமானத்தின் உள்ளும் ராடார் அமைக்கப்பட்டிருக்கும். ராடார் என்னும் பெயர் ஒரு நீண்ட வாக்கியத்தின் சுருக்கமாகும். Radio Direction And Ranging என்னும் வாக்கியத்தில் அமைந்துள்ள சொற்களின் முதல் எழுத்துக்களைக் கொண்ட R-A-D-A-R தொகுப்பே ராடார் என்பதாகும்.

- ஜி.எஸ்.சபரி,
உ. எண் 1475, கோபிச்
செட்டிப்பாளையம்



குடைக்கு ஆங்கிலத்தில் அம்ப்ரெல்லா (Umbrella) என்று பெயர். இலத்தீன் மொழியில் 'அம்ப்ரா' என்றால் 'நிழல் தரும்' என்று பொருள். இதிலிருந்து தான் ஆங்கிலச் சொல்லான 'அம்ப்ரெல்லா' வந்தது.

டிப்ஸ் (Tips) என்பது Too insure prompt services என்ற நான்கு சொற்களின் முதல் எழுத்துகளின் சேர்க்கையே. அதாவது 'வாடிக்கையாளருக்குச் சேவை செய்வதை ஊக்கப்படுத்தும் தொகை' என்பது இதன் பொருள்.



பாலைவனத்தின் ஆங்கிலச் சொல்லான desert என்பது desertus என்னும் இலத்தீன் சொல்லில் இருந்து உருவானது. இதன் பொருள் 'நிராகரிக்கப்பட்டது' என்பதாகும்.

- ஜெ.ச.பிரபாகரன், உ. எண் 1193,
அரசு உயர்நிலைப் பள்ளி,
ப.வடுகபாளையம்

கடவுளின் தூதன்!

முயலை விரட்டிக் கொண்டு சென்ற ரி, திடுக்கிட்டு நின்றது. அங்கே பதுங்கி ிருந்த புலியைப் பார்த்ததும், நரிக்கு நஞ்சு படபடத்தது. கால்கள் நடுங்குவது பாலத் தோன்றியது. 'ஓட முடியாது. டினால் விரட்டிச் சாய்க்கும் வலிமை லிக்கு உண்டு. என்ன செய்வது?' என்று யோசித்தது நரி. அப்போது, புலி கம்பீர ாகச் சொன்னது: ''பலே. வா. என் சாப் ாட்டு வேளைக்குச் சரியாக வந்திருக் றாய்.'' அதைக் கேட்ட நரிக்கு, நடுக்கம் ிருந்தது. ஆனாலும், அது அசரவில்லை.

''என்னைச் சாப்பிடுவது பற்றிக் வலையில்லை. அது உனக்குத்தான் ஆபத்து. காட்டில் நடக்கும் அநீதிகளைக் ண்காணிக்க, கடவுள் என்னை அனுப்பி ிருக்கிறார். இது காட்டில் எல்லோ ருக்கும் தெரியுமே! உனக்குத் தெரி யாதா?'' ஆச்சரியப்படுவது போலக் கேட்டது நரி. புலிக்குக் குழப்பம்!

''உன்னை எப்படி நம்புவது?'' என்றது நரியிடம். ''சந்தேகம் இருந்தால் என்னுடன் வா,'' என்றபடியே முன்னால் நடந்தது நரி. புலி பின்தொடர்ந்தது. இவற்றைப் பார்த்ததும், மற்ற விலங்குகள் சிதறி ஓடின. அதைப் பார்த்த புலி, மேலும் குழம்பியது. அதை ஓரக் கண்ணால் கவனித்த நரி, கம்பீரமாகச் சொன்னது: ''இப்போதாவது நான் சொன்னதை நம்புகிறாயா? அல்லது சாப்பிடப் போகிறாயா?''

நரி கேட்ட தொனி, புலியைக் கலவரப்படுத்தியது. ''நீங்கள் கடவுளின் தூதர் தான். நான் நம்புகிறேன்,'' என்று சொன்ன புலி, காட்டினுள் ஓடி மறைந்தது. அதன் தலை மறைந்ததும், இன்னொரு புறமாக ஓட ஆரம்பித்தது நரி.

- ஜி.எஸ்.ஸ்ரீமதி,
உ. எண் 1382, கோபி






நீரில் இறங்கும்

சத்தமில்லாமல் சாதனை ஒன்று நடந்திருக்கிறது. அதனைச் செய்தவர்கள், சென்னையை அடுத்த பாடூரில் உள்ள ஹிந்துஸ்தான் கல்லூரி மாணவர்கள். ஆடோ கைரோ என்னும் வானூர்தி ஒன்றை உருவாக்கியிருக்கிறார்கள் இவர்கள். அதில் என்ன சிறப்பு? அதைச் செலுத்த ஓடுபாதை வேண்டாம். இருந்தபடி மேலெழும் ஆற்றல் கொண்டது. ஹெலிகாப்டரும் அப்படித்தானே என்று தோன்றுகிறதா? அதுமட்டும் இல்லை; இதை நீரிலும் இறங்க வைக்கலாம். அதையெல்லாம் விட ஆச்சரியம், தேவைப்பட்டால் வீட்டின் மொட்டை மாடியில் இறக்கிக் கொள்ளலாம், என்கிறார்கள் அந்த மாணவர்கள்.

இந்தக் கண்டுபிடிப்புக்குக் காரணம், ஐக்கிய அமெரிக்காவின் விண்வெளி ஆய்வு அமைப்பான நாசா (National Aeronautics and Space Administration). நடத்திய போட்டி! கைராகாப்டர் (gyrocopter) என்ற பெயரில் பொதுவாகக் குறிப்பிடப்படும் இந்த ஊர்தியை, கைரோ பிளேன் (gyroplane), ரோட்டோபிளேன் (rotoplane) என்றும் குறிப்பிடுகின்றனர்.

முனைவர் ஆசுரா



ஆடோ கைரோ!


சரி! போட்டி என்ன? பொது மக்களுக்கும் பயன்படும் வகையில் வானூர்திகளைப் பயன்படுத்துவது எப்படி என்பதுதான் போட்டி. அதற்கு மாணவர்கள் கொடுத்த வடிவம்தான் இந்த ஆடோ கைரோ. இது புதிதல்ல; முதன்முதலில் இதை வடிவமைத்தவர் ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த ஜுவான் டி லா சியர்வா (Juan de la Cierva). 1923ஆம் ஆண்டு ஜனவரி 9 அன்று இவர் வடிவமைத்த கைரோகாப்டர் வெற்றிகரமாகப் பறந்தது.

இரண்டாம் உலகப் போரில் ஜெர்மனி சிறிய ரக கைரோ கிளைடர்களைப் பயன்படுத்தியது வரலாறு: அதையடுத்து ஜப்பான் 'கயாயா கா-1' (kayaya ka-1) என்ற ஆட்டோ கைரோவை தயாரித்தது.

அப்படிப் பழைய கண்டுபிடிப்பு என்றால், மாணவர்கள் அளித்துள்ள இந்த வடிவத்தை நாசா பெரிதாகப் பாராட்டியது ஏன்? நீரிலும் நிலத்திலும் இறங்கவும், எழவும் முடியும் என்பது ஒன்று; தயாரிப்புச் செலவு மற்றும் எரிபொருள் செலவு ஆகியவை ஒரு ஹெலிகாப்டருடன் ஒப்பிடும்போது பத்தில் ஒரு பங்காக இருக்கும் என்பது மற்றொன்று. குறிப்பாக, விமான நிலையம் இல்லாத - அல்லது விமான நிலையம் அமைக்கப்படாத - நல்ல சாலை வசதியில்லாத பகுதிகளுக்குச் செல்லவும், அங்கு தரையிறங்கவும், இயற்கைச் சீற்றத்தின்போது பாதுகாப்புப் பணியில் பயன்படுத்தவும் இந்த ஆடோ கைரோ பேருதவியாக இருக்கும்.

அதைப்போன்றே, மலைப்பாங்கான பகுதிகளில் வசிக்கும் மக்களின் தேவைகளுக்கு உதவவும், அவர்களைப் பாதுகாப்பாக ஏற்றி வரவும் இதனைப் பயன்படுத்தலாம். இந்தக் கண்டுபிடிப்பைப் பற்றி மாணவர்கள் என்ன சொல்கிறார்கள்?

"ஹெலிகாப்டர் பறக்கும் உயரத்தை, இந்த கைரோகாப்டரும் எட்டும். ராணுவம், கப்பல் படை என்று மட்டுமல்ல; பேரிடர் தீர்க்கவும் இதைப் பயன்படுத்தலாம். தவிர, பொதுமக்களின் பயன்பாட்டுக்கு உரியதாகவும் எதிர்காலத்தில் இது அமையும்" என்கிறார்கள் பெர்னார்டு அடைக்கலராஜ், மனோஜ் ஆகிய இருவரும். இந்த இருவருக்கும் நாசா, பரிசும் பாராட்டுச் சான்றிதழும் அளித்துள்ளது. இவர்கள் பயிலும் கல்லூரிக்கு இது வெள்ளி விழா ஆண்டு. ஆக, இரட்டை சந்தோஷம் இவர்களுக்கு. அப்படியானால், இனிமேல் வீடு கட்டும்போது, மாடியில் கைரோவுக்கு இடம் ஒதுக்குவார்கள்! ஸ்கூலுக்கு ஐந்தே நிமிஷத்தில் போய் இறங்கிவிடலாம். அதுசரி; வானத்தில் டிராஃபிக் வந்துவிடுமோ?





உலகப் புகழ் பெற்ற நகர வளர்ச்சித்துறை நிபுணர்களால் உருவாக்கப்பட்ட நகரம் சண்டிகர். இது பஞ்சாப், ஹரியானா ஆகிய இரண்டு மாநிலங்களின் தலைநகர் தவிர, மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதி! இந்துக்களின் வழிபாட்டுக்குரிய சண்டிகேஸ்வரர் கோயில் அமைந்துள்ள இடம் என்பதால், 'சண்டி(கேஸ்வவரர்) வாழுமிடம்' என்ற பொருளில் சண்டிகர் என அழைக்கப்படுகிறது. சண்டிகரும் அதன் அருகில் உள்ள மொஹாலி, பஞ்ச்குலா ஆகிய நகரங்களும் இணைந்து, 'மூன்று நகரங்கள்' எனக் குறிப்பிடப்படுகின்றன.

இந்தியா சுதந்திரம் அடைவதற்கு முன்பாக, இன்றைய பாகிஸ்தானின் பகுதிகளை உள்ளடக்கிய பெரிய மாநிலமாக பஞ்சாப் விளங்கியது. அதன் தலைநகரமாக இருந்த லாகூர், பிரிவினையின்போது பாகிஸ்தானுக்குப் போய்விட்டது. ஆகவே இந்தியாவின் எல்லைக்கு உட்பட்ட பஞ்சாப் மாநிலத்துக்கு ஒரு புதிய தலைநகரம் அவசியமானது.



அதன்படி, 1951ல், பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த புகழ் பெற்ற கட்டிடக்கலை மற்றும் நகர திட்டமிடல் வல்லுனரான லேகார் பூசியர் தம் குழுவினருடன் வடிவமைத்த நகரம் இது.

1966ஆம் ஆண்டு பஞ்சாப் மாநிலத்தில் இந்தி மொழி பேசும் மக்கள் அதிகமாக வசிக்கும் பகுதியைப் பிரித்து, ஹரியானா என்ற பெயரில் ஒரு புதிய மாநிலத்தை இந்திய அரசு உருவாக்கியது. சண்டிகர் நகரம் பஞ்சாப், ஹரியானா ஆகிய இரு மாநிலங்களையும் ஒட்டி அமைந்திருந்ததால், அதை மத்திய அரசாங்கத்தின் நேரடி ஆட்சிக்குட்பட்ட பகுதியாக அறிவித்து, அதையே இரு மாநிலங்களுக்கும் தலைநகரமாக்கி விட்டது.

இது, இமய மலையின் வட மேற்குப் பகுதியில்

உள்ள சிவலிங்க மலைப்பகுதியின் அடிவாரத்தில் அமைந்துள்ளது. இதன் கிழக்கே ஹரியானாவும் பஞ்சாபும், அமைந்துள்ளன. திட்டமிட்டு உருவாக்கப்பட்ட இந்த நகரமெங்கும் ஆலமரம், யூக்லிப்டஸ், அசோக மரம், போன்ற மரங்கள் அடர்ந்து காணப்படுகின்றன. நகரத்தின் ஓரப்பகுதிகளில் காடுகளும் உள்ளன. அங்கே மான்களும், கிளி, மரங்கொத்தி, மயில் போன்ற பறவை இனங்களும் வாழ்கின்றன. இங்குள்ள சுக்னா ஏரிக்கு சைபீரியாவிலிருந்து கூட பறவைகள் வருகின்றன.

சண்டிகரின் மக்கள் தொகை ஒன்பது லட்சம். ஆயிரம் ஆண்களுக்கு 777 பெண்கள் என்ற விகிதத்தில் உள்ளனர். இந்தியாவிலேயே ஆண்-பெண் விகிதம் மிகக் குறைவாக இருப்பது இங்குதான். எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள்: 82 சதவிகிதம். மக்களில் 79 சதவிகிதம் இந்துக்கள்; 16 சதவிகிதம் சீக்கியர்கள்; இந்தி, பஞ்சாபி, ஆங்கிலம் மூன்றும் முக்கிய மொழிகள். சண்டிகரில் வசிப்பவர்களில் கணிசமானவர்கள் அரசுப் பணியாற்றுவதற்காக பஞ்சாப், ஹரியானா போன்ற அக்கம் பக்கத்து மாநிலங்களிலிருந்து வந்து குடியேறியவர்கள். அரசுப் பணியாற்றி, ஓய்வுபெற்றவர்கள் இங்கே அதிகமாக வசிப்பதால், 'பென்ஷன்தாரார்களின் சொர்க்கம்' என்ற பெயரும் இதற்கு உண்டு.

பணக்கார நகரம்!

இங்கே காகிதம், உலோகம், இயந்திரங்கள், வாகன பாகங்கள், மருந்துப் பொருட்கள் தயாரிக்கும் பெருந் தொழிற்சாலைகளும், 2500க்கும் மேற்பட்ட சிறுதொழிற் சாலைகளும் உள்ளன. இந்தியாவின் 'பணக்கார நகரம்' என்ற பெருமையும் சண்டிகருக்கு உண்டு. நகரத்தின் 17வது செக்டாரில் இந்தியாவின் அனைத்து வங்கிகளின் கிளைகளும், பிராந்திய அலுவலகங்களும் உள்ளன.

இந்திய விமானப்படையின் தளம் ஒன்று இங்கே உள்ளது. இதன் வழியாகத்தான் காஷ்மீரில் உள்ள லே மற்றும் சியாச்சின் பகுதிகளில் உள்ள ராணுவத்தினருக்குத் தேவையான உணவுப் பொருட்கள் மற்றும் ராணுவத் தளவாடங்கள் கொண்டு செல்லப்படுகின்றன.



கௌதம் ராம்

தரமான பல பள்ளிகளும், கல்லூரிகளும் சண்டிகரில் உள்ளன. பஞ்சாப், ஹரியானா, இமாசலப் பிரதேசம், ஜம்மு-காஷ்மீர், உத்தராஞ்சல் மாநிலங்களிலிருந்து மேற்படிப்புக்காக ஏராள மானவர்கள் இங்கே வருகிறார்கள். கபில்தேவ், விளையாட்டு வீரர்கள் மில்கா சிங், அபினவ் பிந்த்ரா, யுவராஜ் சிங் ஆகியோர் சண்டிகரைச் சேர்ந்த சில நாடறிந்த முகங்கள்.



• ராக் கார்டன்

சண்டிகருக்கென்று பிரத்யேகமான உணவு வகை ஏதுமில்லை. மக்கள் பஞ்சாபிய உணவு வகைகளையே சாப்பிடுகிறார்கள். இந்தி அல்லது பஞ்சாபி கலந்து பேசும் ஆங்கிலத்தை தமாஷாக 'ஹிங்கிலிஷ்' அல்லது 'பங்கிலிஷ்' என்று குறிப்பிடுகிறார்கள்.

ஏராளமான பூங்காக்களும், தோட்டங்களும் இங்கு உள்ளன. பலவகையான கள்ளிச் செடிகள் கொண்ட காக்டஸ் கார்டன், ஆண்டுதோறும் மாம்பழத் திருவிழா நடக்கும் நூறு ஏக்கர் பரப்புள்ள பிஞ்சூர் தோட்டம், சிற்பப் பூங்கா, போகன்வில்லா பூங்கா, தாவரவியல் பூங்கா, ரோஜாத் தோட்டம் ஆகிய இயற்கையான தோட்டங்களைத் தவிர, மிகப் பிரபலமான இவ்‍
வொன்று ராக் கார்டன்
சண்டிகர் உருவானபோது
கிடைத்த தேவையற்ற
பொருட்களைக் கொண்டு
மிகுந்த கலைநயத்துடன்
உருவாக்கப்பட்டதுதான்
ராக் கார்டன். இதனை உருவாக்கிய
பொதுப் பணித்துறையில் பணியாற்றிய
இஞ்சினீயரான நேக் சந்த் இன்று
இந்தப் பூங்கா வளாகத்திலேயே
வசிக்கிறார். மேலும், 14 மீட்டர் உய
முள்ள 'திறந்த கை' சிற்பம் சுற்றுலா
பயணிகளை ஈர்ப்பது.

சட்பிர் மிருகக் காட்சி சாலையில்
உள்ள லயன்ஸ் சஃபாரியில் சுற்
வரும்போது, அதிர்ஷ்டமிருந்தால் ராய
பெங்கால் டைகர் தரிசனம் தரும்.

மேலும், சண்டிகர் நகரம் உருவா
கதையை எடுத்துச் சொல்லும் சி
மியூசியம், அரசு கலைக் கூடம், அகி
உலக பொம்மை மியூசியம், அ
வியல் மியூசியம் போன்றவைகளும்
மானசா தேவி கோயில், சண்டி மந்தி
ஆகியவையும் காணத்தக்கவை.

அறுவடை காலத்தில் பைசா
திருவிழா முக்கியம் வாய்ந்தது.





சிலிர்க்க வைத்த தொகுப்பு!

'படி கற்ற பாடம்' கதைப்பாடல் மிக அருமை! எங்கிருந்தாலும் நமது கடமைகளைச் சிறப்பாகச் செய்தால் ஒரு நாள் நமக்குரிய சிறப்பு, தானே வந்து சேரும் என்பதை உணர வைத்தது. **எஸ்.வளர்மதி, கன்னியாகுமரி** ✱ இன்று நிறையக் குழந்தைகள் சிறு வயதிலேயே கண்ணாடி போடும் நிலை உள்ளது. அதற்குத் தீர்வு சொல்வதுபோலக் கண்களைக் காக்கும் உணவுகள் என்ற கட்டுரை இருக்கிறது. - **ஆர்.பிருந்தா, பெங்களூரு** ✱ காமெடி கலாட்டா சிரிக்க மட்டுமா, சிந்திக்கவும் வைக்கிறது. டாக்டர் பக்கம் அருமை. எதை, எதை, எப்படித் தவிர்க்கணும், எடுத்துக்கணும் என்பதைத் தெளிவாக விளக்கியது கட்டுரை! - **சு.அபிஷேக், சென்னை** ✱ சிறுவர் கதைகள், சித்திரக் கதைகள், சிறுவர் பாடல் என ஒவ்வொரு மாதமும் ஆரவாரமின்றி வரும் கோகுலத்தில் பயனுள்ள விவரங்களைத் தெரிந்துகொள்ள முடிகிறது. - **அ.அருண் பாலாஜி, கும்பகோணம்** ✱ எதிர்கால நம்பிக்கை நட்சத்திரமான ரோஸல் தடகளப் போட்டிகளில் சர்வதேச அளவில் சாதனை புரிந்திட எங்களின் அன்பான வாழ்த்துகள். - **ம.அக்ஷயா, உ. எண் 1346, அரூர்** ✱ தெய்வச் சிலையும், கோயில் படிக்கல்லும் தத்தம் ஏற்றத்தாழ்வு பற்றி விமர்சிப்பதான வளர்கவியின் உரையாடல் பாடல் மன வேற்றுமை தீர்க்கின்ற மகா அற்புதங்களுடன் மிளிர்கிறது - **எஸ்.ஏ.கேசவன், இனாம்மணியாச்சி** ✱ தச்சன் குருவி என்று மரங்கொத்திப் பறவையைப் பற்றி அழகான படத்தோடு வெளியிட்டு அதன் மேல் காதல் கொள்ளச் செய்துவிட்டீர்கள். - **ஆ.மகாலட்சுமி, காயக்காடு** ✱ அக்கரை அதிசயங்கள், கதம்பம், திறமை, சுட்டீஸ் கைவண்ணம், டாக்டர் பக்கம், காமெடி கலாட்டா போன்ற பகுதிகள் படிப்பதற்கும், பார்ப்பதற்கும் மிகவும் சுவாரஸ்யமாக இருந்தன. - **ஒய்.எஸ்.ஸ்ரீரவி ராகுல், ஈரோடு** ✱ இன்று நாம் அன்றாடம் பயன்படுத்தும் டூத் பிரஷ், கைதியாக இருந்த ஒருவரின் கண்டுபிடிப்பு என்பதைப் படித்தபோது ஆச்சரியமாக இருந்தது. - **ம.அக்ஷயா, உ.எண் 1346, அரூர்** ✱ சூரியகாந்தியைக் காரணகாரியத்தோடு 'பார்க்கும் பூ' என்று வர்ணித்து, வண்ணங்களில் மலர வைத்து வார்த்தைகளில் மணக்க வைத்த தொகுப்பு சிலிர்ப்பு! - **ஆர்.ஜி.காயத்ரி, மணலிவிளை** ✱ சிறுவர்களுக்காக மட்டுமல்ல; பெரியோர்களாகிய நாங்களும் பயன் உள்ள (அறிவியல் முதல் விளையாட்டு வரை) செய்திகள் படித்துத் தெரிந்து கொள்ள கோகுலம் கோபுரமாய் உயர்ந்து நிற்பதோடு, அனைவரது உள்ளத்திலும் நிறைந்து நிற்கின்றது. இது குழந்தைகளுக்குக் கிடைத்த நல்லதோர் அறிவுப் பெட்டகம். - **கனக முத்துச் சிதம்பரம், மயிலாடுதுறை**

சாம்பியன்ஸ் லீகிலும் தாம் ஒரு சிறந்த கேப்டன் என்பதை நிரூபித்து விட்டார் தோனி. இதுவரை அவர் பங்கேற்ற எல்லா 20-20 போட்டிகளிலும் அவருடைய அணி இறுதிப் போட்டி வரை சென்றிருக்கிறது. முதல் 20 - 20 போட்டியில் இந்திய அணி ஃபைனலுக்குச் சென்று போட்டியை வென்றது. அதேபோல முதல் ஐ.பி.எல்., சாம்பியன் லீக் போட்டியிலும் தோனி தலைமை தாங்கிய சென்னை சூப்பர் கிங்ஸ் அணி ஃபைனல் வரை சென்றது. அடுத்த முறை சாம்பியன் பட்டத்தை வென்றது. அதுபோல, இந்திய அணியின் கேப்டனாக தோனி மாறியபிறகு அணிக்கு மேலும் பல பெருமைகள் கிடைத்தன
ஒருநாள் போட்டியின் தரவரிசைப் ப
டியலில் இரண்டாவது இடமும், டெஸ்
போட்டியில் முதல் இடமும் இந்தி
அணிக்குக் கிடைத்தன. இந்திய அ
யில் வேறு எந்த கேப்டனுக்கும் இப்படி
பட்ட பெருமைகள் கிடையாது. இந்த
தொடர் வெற்றிகள் மிகச் சிறப்பானவை
அதேசமயம், டிராவிட், டெண்டுல்க
போன்ற சீனியர்கள் ஓய்வு பெறும் நேர
தில் அவர்களின் இடத்தை நிரப்பச் ச
யான வீரர்கள் அமைந்தால்தான் தோன
யின் தலைமையில் வெற்றிகள் தொடரும்

டேவிஸ் உலகக்கோப்பைக்கா

தொடரும் வெற்றிகள்

ச.ந. கண்ணன்



நடால் - ஃபெடரர்

தகுதிச்சுற்றுப் போட்டியில், இந்திய அணி பிரேஸிலை 3-2 என்கிற கணக்கில் ஜெயித்து அடுத்த சுற்றுக்கு முன்னே றியது. ஆனால் அடுத்த சுற்று மிகவும் கடினமாக அமைந்துவிட்டது. டென்னிஸில் உலகின் முதல்நிலை நாடான செர்பியாவுடன் மோதவிருக்கிறது. போட்டி அடுத்த வருடம் மார்ச் 4-6 தேதிகளில் செர்பியாவில் நடக்கவுள்ளது.


பாகிஸ்தான் கிரிக்கெட் ஊழல் குற்றச்சாட்டுகளால் தடுமாறிக் கொண்டிருக்கிறது. ஒரு பிரச்னை முடிந்தால் இன்னொரு பிரச்னை உடனே ஆரம்



✱ கபில் தேவ்



✱ இம்ரான் கான்



✱ தோனி


பித்துவிடுகிறது. ''முடிவில்லாமல் செல்லும் பிரச்னைகளுக்குத் தீர்வாக, இம்ரான் கானிடம் பாகிஸ்தான் கிரிக்கெட் நிர்வாகத்தை ஒப்படைக்க வேண்டும்'' என்கிறார் இந்திய அணியின் முன்னாள் கேப்டன் கபில்தேவ். ''இம்ரான் கான் தலைமையில்தான் பாகிஸ்தான் அணி உலகக்கோப்பையை வென்றது. பாகிஸ்தான் கிரிக்கெட்டை அவரிடம் ஒப்படைத்துவிட்டால், பிறகு இதுபோன்ற பிரச்னைகள் ஒருபோதும் தலைதூக்காது'' என்கிறார் கபில்தேவ்.

◆◈◈◇ **விளையாட்டு** ◇◈◈◆

சென்ற காமன்வெல்த் கேம்ஸ், ஆஸ்திரேலியாவில் உள்ள மெல்பர்னில் நடந்தது. இந்த வருடம் நம் தில்லியில். அடுத்த காமன்வெல்த் கேம்ஸ், 2014ல் ஸ்காட்லாந்தில் உள்ள க்ளாஸ்கோ நகரத்தில் நடக்க உள்ளது. இதுவரை ஸ்காட்லாந்தில் இருமுறை காமன்வெல்த் கேம்ஸ் நடைபெற்றிருந்தாலும் க்ளாஸ்கோவில் நடைபெறுகிற பெரிய சர்வதேசப் போட்டி இதுதான்.

இப்போது டென்னிஸ் உலகில் உள்ள கேள்வி இதுதான் : 'யார் சிறந்த வீரர்? ஃபெடரரா அல்லது நடாலா?' இதற்கு நடால் என்ன சொல்கிறார்? ''நான் கிராண்ட் ஸ்லாம் போட்டிகளில் ஜெயித்து வருவது மகிழ்ச்சியே. ஆனால் எல்லோரும் இதை வைத்து நான்தான் ஃபெடரரை விடச் சிறந்த வீரர் என்று சொல்கிறார்கள். அது சரியல்ல. நிச்சயம் ஃபெடரர் தான் இப்போதைக்குச் சிறந்த வீரர். அவர் தானே என்னைவிட அதிக கிராண்ட்ஸ்லாம் பட்டங்கள் வென்றுள்ளார்!''


கதை, படம்:
பிள்ளை
வீட்டுலேயே இருந்தா எப்படி? நாளைக்கு தீபாவளி!
பட்டாசு வாங்கி வந்து ஜமாய்க்கணும்.
சூப்பரான ராக்கெட்டா நாலு கொடு.
பட்டாசு
இது ஏன்? பாம்பு மாத்திரை போதாதா?
கிண்டலா? ஈவ்னிங் வந்து பாரு...
நைட் ஏரியாவை கலக்கணும்.


இதை வித்தியாசமா எப்படி வெடிக்கலாம்?
இது சூப்பர் இல்லே?
ஒரே நேரத்துல நாலும் பறந்தா அட்டகாசமா இருக்குமே...!
இப்போ நாலுக்கும் கனெக்‌ஷன் தந்தாச்சு... வெரிகுட்!
ரெடி... ஒன்... டூ... த்ரீ...
பத்த வைச்சுட்டேன்: இப்ப பாருங்க!
இந்தப் பக்கம் வந்துடு ஆதி!
அட, கடவுளே!
ஆ தி . . . ஹே ப் பி தீபாவளி!


ஆனைமலையில்

மின்மினிகள் ஒளிவிளக்காய்
ஜொலித்திடும்;
மென்குயிலின் கூட்டம் பாட்டு
இசைத்திடும்;
தின்பண்டக் கடைகளெங்கும் நெருக்கடி;
திசைகாக்கும் புலியாரிடம் கைத்தடி!

குள்ளநரி பொம்மை ஆட்டம் ஆடிடும்;
குட்டிகளோ சுற்றியாட ராட்டினம்;

கொல்லிமலையின் குரங்கு மேளம்
கொட்டிடும்;
குண்டுக் கரடி நாதஸ்வரம் ஊதிடும்!

குழிமுயல்கள் துள்ளித் துள்ளி நாட்டியம்;
குதித்து ஆடும் புள்ளிமான்கள்
கூட்டமும்;



திருவிழா!

எழில் மிகுந்த வண்ணத் தோகை
காட்டியே
ஏகமாக நடனமாடும் மயிலுமே!

தூக்கி வீசும் பழத்தை முள்ளில்
தாங்கியே
வித்தை காட்டும் முள்ளம்பன்றி
ஓர்புறம்;
மூக்கைத் தீட்டும் காகத்தோடு, நாரைகள்
மென்குரலில் குழறிப் பாடி சிரிக்குமே!

சிங்கராஜா பூவை அள்ளித் தூவுறார்;
சிறுத்தையாரோ மெய்க்காவல் தருகிறார்;
பொங்கிவிழும் பேரருவிக் கரையிலே
பெருகிவரும் ஆனந்தம் காட்டிலே!

ஆனைத்தேரில் பூனைச்சாமி ஊர்வலம்
ஆகா! என்றே விலங்குயாவும்
கும்பிடும்!
ஆனைமலையில் ஆடிப்பாடும்
பெருவிழா!
ஆண்டுதோறும் நடக்கும் இந்தத்
திருவிழா!

புலேந்திரன்



மேகம் 7 வகை!

முனைவர் ஆசுரா

அண்ணாந்து பார்த்து மேகம் இருக்குன்னு ஒரே வார்த்தையில் சொல்லி விடுவோம். ஆனா அது அமைந்திருக்கிற உயரத்தை வைத்து ஏழு பிரிவாகப் பிரிக்கலாம். 20,000 அடிகளுக்கு மேலே உள்ளவை 'உயர்ந்த இட மேகங்கள்' என்கிறார்கள். அதேபோல, இடைப்பட்ட இட மேகங்கள், தாழ் இட மேகங்கள், தாழ் முதல் இடைப்பட்ட இட மேகங்கள், செங்குத்தாகத் தோன்றும் மேகங்கள் என்று வகைப்படுத்துகிறார்கள். இவை தவிர, 51 முதல் 56 கிலோ மீட்டரில் தோன்றுவை 'நாக்டிலுசென்ட்' என்றும், 19 முதல் 29 கிலோ மீட்டரில் தோன்றுபவை 'நாக்ரிசஸ்' என்றும் அழைக்கப்படுகின்றன. எங்கே இருந்தா என்ன? மழை may comeனு இல்லாம, மழை தர மேகமா இருந்தாச் சரி!

போகாத பொழுது!

'ஒரு நள் போறதே ஒரு வருஷமாத் தெரியுது'ன்னு சிலர் சொல்வாங்க. ஆனா, வெள்ளிக் கிரகத்தில் அதான் நிஜம். ஏன் தெரியுமா? வெள்ளிக் கிரகம் சூரியனை வலம் வர எடுத்துக் கொள்ளும் காலம் 224 நாட்கள். ஆனால், தன் அச்சில் சுழல, 243 நாட்களை எடுத்துக் கொள்கின்றது. (பூமி தன் அச்சில் ஒரு முறை சுழல ஆகும் காலமே ஒரு நாள்). மிகவும் மெதுவாகச் சுழலும் கோள் என்பது மட்டுமல்ல; மிகவும் ஒளி வீசும் கோளும் (brightest planet) வெள்ளிதான்.

சந்திரா

நாசா விண்வெளி ஆய்வு மையம் தன்னுடைய அப்சர்வேட்டரிக்கு 1999 ஆம் ஆண்டு வைத்த பெயர் சந்திரா. இயற்பியல் துறையில் நோபல் பரிசு பெற்ற தமிழக விஞ்ஞானி டாக்டர் சுப்பிரமணியம் சந்திசேகர். (இவர் சர்.சி.வி. இராமனின் சகோதரி மகன். இருவருமே சென்னை மாநிலக் கல்லூரியில் இளநிலை இயற்பியல் பயின்றவர்கள்). இவர் கண்டறிந்த 'சந்திரசேகர்'

* சார்லஸ் பேப்ரி







* சந்திரசேகர்

வரம்பு என்பது நட்சத்திரம் தொடர்பானது. அதாவது, ஒரு நட்சத்திரம் அழியும் விதத்தைப் பொறுத்து, அது ஒரு நியூட்ரான் நட்சத்திரம், வெள்ளைக் குள்ளன் அல்லது சிவப்பு அசுரன் என இவற்றில் ஏதேனும் ஒன்றாக மாறுகிறது என்று இவர் தெரிவித்தார். "ஒரு நட்சத்திரம் வெள்ளைக் குள்ளனாக மாறுவதற்கு அதன் அதிகபட்ச எடை சூரியனின் எடையைப்போல் 1.44 மடங்கு இருக்க வேண்டும்" என்றும் அறிவித்தார். இதுவே சந்திரசேகர் வரம்பு என அழைக்கப்படுகின்றது. விண்வெளித் துறையில் இந்தியர்கள் வரம்பில்லாம சாதிக்கணும்.

பூமிக்கு ஒரு போர்வை

வீட்டுக்குக் கூரை சரியில்லைன்னா மழையும், வெயிலும் சகஜமா உள்ளே வரும். அது மாதிரி, நம் பூமிக்குக் கூரையா இருப்பது, ஓசோன் படலம். அதுல ஓட்டை விழுந்தா என்ன ஆகும்? சூரியனிலிருந்து வெளிப்படுகின்ற புற ஊதாக் கதிர்கள் பூமியிலுள்ள உயிரினங்களைப் பாதிக்கும். இந்த புறஊதாக் கதிரில் 97-99 சதவிகிதம் வரை தடுத்து நிறுத்துகிற பணியைச் செய்வது ஓசோன் படலம்தான். இது, பூமியின் மேற்பரப்பில் இருந்து 13 முதல் 20 கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது. ஓசோனின் தடிமன் காலநிலை மற்றும் புவியியல் தன்மைகளுக்கு ஏற்ப மாறுபடும். ஓசோன் படலத்தை 1913ஆம் ஆண்டு பிரான்சு நாட்டைச் சேர்ந்த சார்லஸ் பேப்ரி, ஹென்ரி பூசன் இணைந்து கண்டறிந்தனர். அது சரி; அந்தப் படலம் மேலும் ஓட்டையாகாம நாம் பார்த்துக்கணுமே!

பெயரைச் சொல்; பரிசை வெல் - 8







1. ______________ 2. ______________________ 3. ____________________

என் பெயர் : ....

வகுப்பு, பள்ளி : ....

....

வீட்டு முகவரி : ....

.... பின்கோடு ....

போட்டி பரிசு ரூ.1000/-

கொடுக்கப்பட்டுள்ள படங்களைக் கவனித்துப் பாருங்கள். இவை தொடர்பான செய்திகளும், இவற்றுக்கான வேறு படங்களும் இந்த இதழில் இடம் பெற்றுள்ளன. அவற்றின் மூலம், இங்கே தரப்பட்டுள்ள படங்களின் பெயர் என்ன என்று கண்டுபிடித்து, கூப்பனையும் பூர்த்தி செய்து இந்தப் பக்கத்தைக் கத்திரித்து அனுப்புங்கள். சரியான விடைகள் எழுதுவோரில், பத்து பேருக்குக் குலுக்கல் முறையில் பரிசு பகிர்ந்து அளிக்கப்படும்.

ஆசிரியர்' தீர்ப்பே இறுதி. முடிவு தேதி : 30.11.2010

அனுப்ப வேண்டிய முகவரி:
ஆசிரியர், கோகுலம்,
(பரிசுப் போட்டி)
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை-32

கோகுலம் சிறுவர் சங்கம்

உறுப்பினர்கள்


1851


1852


1853


1854


1855


1856


1857


1858


1859


1860


1861


1862


1863


1864


1865


1866


1867


1868


1869


1870


1871


1872


1873


1874


1875

பயர் மற்றும் விவரங்கள் 57 ஆம் பக்கம்

Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN/CC(S)/DN/109/09-11 • Licensed to post without prepayment under PMG's Licence No. WPP TN/CC(S)/DN/47/09-11 • Registered as a Newspaper in Srilanka

